# தினபூமி

thinaboomi.com


பூமி: 30 சுற்று: 151 சித்திரை 26

Regd. No.CBE/090/2011-2013

கோவை, வெள்ளி, மே 09, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

**இந்தியா-பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்ய தயார்: அமெரிக்க அதிபர் அறிவிப்பு**

...2-ம் பக்கம்

**தொடர்ந்து விழிப்போடு இருங்கள்: பல்வேறு துறை அதிகாரிகளுக்கு பிரதமர் மோடி வலியுறுத்தல்**

...3-ம் பக்கம்

**போர்ப் பதற்றம் எதிரொலி: பஞ்சாப் - மும்பை போட்டி அகமதாபாத்துக்கு மாற்றம்**

...6-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, பள்ளிக் கல்வித்துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் தரை மற்றும் 2 தளங்களுடன் 19.65 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக்கான புதிய கட்டிடத்தையும், தரை மற்றும் 4 தளங்களுடன் தலா 18.91 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர்களுக்கான தனித்தனி விடுதிக் கட்டிடங்களையும் திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கலெக்டர் பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருச்சி மாவட்டம், துவாக்குடியில்

# 19.65 கோடி ரூபாய் மதிப்பில் அரசு மாதிரிப்பள்ளிக்கு புதிய கட்டிடம்

## 18.91 கோடி ரூபாய் செலவில் விடுதிக்கட்டிடங்கள்

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

திருச்சி, மே 09-

**திருச்சி மாவட்டம், துவாக்குடியில் 19.65 கோடி ரூபாய் மதிப்பில் அரசு மாதிரிப்பள்ளிக்கு புதிய கட்டிடம் மற்றும் 18.91 கோடி ரூபாய் செலவில் விடுதிக் கட்டிடங்களையும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.**

**தனித்தனி விடுதிகள்...**

பள்ளிக்கல்வித்துறை சார்பில் திருச்சிராப்பள்ளி, துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 19.65 கோடி ரூபாய் செலவில் கட்டிப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக்கான புதிய கட்டிடத்தையும், தரை மற்றும் நான்கு தளங்களுடன் தலா 18.91 கோடி ரூபாய் செலவில் கட்டிப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர்களுக்கான தனித்தனி விடுதிக் கட்டிடங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

**10 மாவட்டங்களில்...**

அரசுப் பள்ளிகளின் கல்வி தரத்தை உயர்த்த தமிழ்நாடு அரசு பல முன் மாதிரித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதிலும் குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் அரசுப் பள்ளி மாணவர்கள் நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லாமல் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தைப் போக்கவும், அரசுப் பள்ளி மாணவர்கள் முதன்மை உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதை ஊக்கப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் 2021-22ம் ஆண்டில் தமிழ்நாட்டில் கல்வியில் பின்தங்கியுள்ள 10 மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, அம்மாவட்டத்தின் அரசுப் பள்ளிகளில் பயிலும் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இந்த மாதிரிப் பள்ளிகளில் உண்டு உறைவிட வசதியுடன் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

**15 மாவட்டங்களில்...**

இதன் விளைவாக முதலாம் ஆண்டிலேயே 75 மாணவர்களுக்கு நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி பயில இடம் கிடைத்தது. 2022-23ம் ஆண்டில் மேலும் 15 மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, அந்த ஆண்டு 274 மாணவர்களுக்கு முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் இடம் கிடைத்தது. அத்துடன் இரண்டு மாணவிகள் தாய்வான் நாட்டின் முழு கல்வி உதவித் தொகை

(கடைசி பக்கம் பார்க்க)

### ஸ்ரீநகர் உள்ளிட்ட 15 முக்கிய நகரங்களில்

# பாகிஸ்தான நடத்த இருந்த தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்தது இந்தியா

புதுடெல்லி, மே 09-

**ஸ்ரீநகர், பதன்கோட், ஜலந்தர் உள்ளிட்ட இந்தியாவின் 15 நகரங்களில் பாகிஸ்தான் நடத்த இருந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக இந்திய பாதுகாப்பு துறை அறிவித்துள்ளது. மேலும், லாகூரில் உள்ள பாகிஸ்தானின் வான் பாதுகாப்பு பிரிவான எச்.கியூ.-9 தாக்கி அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்திய யூனியன் பிரதேசங்களில் ஒன்றான ஜம்மு மற்றும் காஷ்மீரில் முக்கிய சுற்றுலா பகுதியான பஹல்காம் பகுதியில் கடந்த 22-ம் தேதி பயங்கரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தினர். இதில், நேபாள நாட்டை சேர்ந்த ஒருவர் உள்பட சுற்றுலாவுக்காக சென்றிருந்த 26 பேர் பலியானார்கள். அவர்கள் அனைவரும் ஆண்கள் ஆவர். அவர்களின் மதம் என்னவென கேட்கப்பட்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானில் இருந்து செயல்பட்டு வரும் லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான 'தி ரெசிஸ்டண்ட் பிரண்ட்' பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது. எனினும், இதற்கு உலக நாடுகள் தரப்பில் இருந்து பெரிய அளவில் எதிர்வினை வரவில்லை. இரு வார காலம் அமைதியாக இருந்த இந்தியா இதற்கு தக்க பதிலடி கொடுத்தது.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் கடந்த 6-ந்தேதி நள்ளிரவில் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த துல்லிய தாக்குதலில், 9 பயங்கரவாத உட்கட்டமைப்புகள் இலக்காக கொள்ளப்பட்டன. இதில், பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் 15 நகரங்களில் பாகிஸ்தான் நடத்த இருந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டு உள்ளது என பாதுகாப்பு துறை அறிவித்து உள்ளது. இந்திய யூனியன் பிரதேசங்களில் ஒன்றான ஜம்மு-காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலம் மீது பாகிஸ்தான் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. காஷ்மீரின் பாரமுல்லா, உரி, பூஞ்ச் பகுதிகளில் கனரக பீரங்கிகளை பாகிஸ்தான் பயன்படுத்தி வருகிறது.

காஷ்மீரின் குப்வாரா, பூஞ்ச், ரஜோரி, மெந்தார் உள்ளிட்ட நகரங்கள் மீதும் தாக்குதலை நடத்தியது. இந்நிலையில், இதற்கு இந்திய ஆயுதப் படைகள் பதிலடி கொடுத்து வருகின்றன. எல்லையில் இருந்து ஏறக்குறைய 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள லாகூரில் ராணுவ நிலைகள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது.

இதில், லாகூரில் உள்ள பாகிஸ்தானின் வான் பாதுகாப்பு பிரிவான எச்.கியூ.-9 தாக்கி அழிக்கப்பட்டது. பீரங்கி கொண்டு தாக்குதல்

(கடைசி பக்கம் பார்க்க)

# ரூ.2 ஆயிரம் கோடி பத்திரங்கள் ஏலம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, மே 09-


**தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 2,000 கோடி மதிப்பில் 10 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1,000 கோடி மற்றும் 15 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1,000 கோடி ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.**

இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் மே 13-ந்தேதி நடத்தப்படும். போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியில் இருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியில் இருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) மே 13-ந்தேதி சமர்ப்பிக்கப் பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்



உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சித்திரைத் திருவிழாவின் 10-ம் நாளான நேற்று மீனாட்சி சுந்தரேசுவரருக்கு திருக்கல்யாணம் காலை 8.51 மணியளவில் நடைபெற்றது. அப்போது திருமணமான பெண்கள் புதுத்தாலியை அணிந்து கொண்டனர். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.





**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE | தங்கம் | வெள்ளி | டாலர் | பெட்ரோல் |
|---|---|---|---|---|---|
| -411.97 | -140.60 | 1 சவரன் ₹73,040 | 1 கிலோ ₹11,000 | ₹85.43 | ₹102.75 |
| பாயிண்ட் 60334.81 | பாயிண்ட் 140.60 | 1 கிராம் ₹9,130 | 1 கிராம் ₹110.00 | | டீசல் ₹92.34 |

# இந்தியா - பாக். இடையே மத்தியஸ்தம் செய்ய தயார்

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு



**வாஷிங்டன், மே 09-**

இந்தியா- பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்ய தயார் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது. ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் நேற்று நள்ளிரவு தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் பயங்கரவாதிகள் 70 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தியாவின் தாக்குதல் நடவடிக்கைக்கு பதிலடி கொடுப்போம் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது. இதனால், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், இருநாடுகளும் மோதலை அதிகரிக்க கூடாது எனவும் மத்தியஸ்தம் செய்ய தயராக உள்ளதாகவும் கூறியுள்ளார். முன்னதாக பாகிஸ்தான் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய செபாஷ் ஷெரீப் கூறியதாவது: "இந்தியா நடத்திய தாக்குதலில் உயிர்நீத்த அப்பாவிகளின் ரத்தத்துக்கு பழிவாங்குவோம் என்று நாங்கள் உறுதி ஏற்றுள்ளோம். பாகிஸ்தான் தனது தற்காப்புக்காக ஒரு பயங்கரமான பதிலடியை வழங்க முடியும் என்பதைக் காட்டினோம். எல்லைப் பகுதியில், சுமார் ஒரு மணி நேரம் சண்டை நடந்தது. பாகிஸ்தான் விமானிகள் வான்வெளியில் இருந்து தாக்கினர், எதிரியின் விமானங்கள் துண்டு துண்டாகச் சிதறின. பாகிஸ்தான் பயங்கரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் நம்மை நம் பாதையிலிருந்து விலக்கிவிடலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால், பாகிஸ்தான் ஒற்றுமையாக நிற்கிறது" என்றார்.

## இந்தியா-பாக். இடையே போர் பதற்றம்:

# லாகூரில் இருந்து அமெரிக்கர்கள் வெளியேற உத்தரவு

**இஸ்லாமாபாத், மே 09-**

அமெரிக்க துணைத் தூதரகம் அனைத்து தூதரக ஊழியர்களையும் பாதுகாப்பான இடங்களில் தங்கியிருக்க உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். அந்தத் தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் வான்வழி தாக்குதலை மேற்கொண்டது. இதில் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இதனால் ஜம்மு காஷ்மீர் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் இந்தியாவில் உள்ள 15 நகரங்கள் மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டதாகவும், பாகிஸ்தானின் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் பாகிஸ்தானின் லாகூரில் உள்ள வான் பாதுகாப்பு அமைப்பு அழிக்கப்பட்டதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், லாகூரில் இருந்து அமெரிக்கர்கள் வெளியேற அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது ;-

"லாகூரில் ஆளில்லா விமானங்கள் வெடித்ததாக வந்த செய்திகள், சுட்டு வீழ்த்தப்பட்ட ஆளில்லா விமானங்கள் மற்றும் வான்வெளியில் ஊடுருவக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றிய தகவல்கள் காரணமாக, லாகூரில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகம் அனைத்து துணைத் தூதரக ஊழியர்களையும் பாதுகாப்பான இடங்களில் தங்கியிருக்க உத்தரவிட்டுள்ளது.

மோதல்கள் நிறைந்த பகுதியில் இருக்கும் அமெரிக்க குடிமக்கள் பாதுகாப்பாக வெளியேற முடிந்தால் வெளியேற வேண்டும். வெளியேறுவது பாதுகாப்பானதாக இல்லாவிட்டால், அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கியிருக்க வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை:

# பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் இந்தியாவுக்கு முழு ஆதரவு..!

**புதுடெல்லி, மே 09-**

இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை உலக நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளது.

காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22-ந் தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா மே 7-ந்தேதி(நேற்று முன்தினம்) அதிரடி தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு 'ஆபரேஷன் சிந்தூர்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் பாகிஸ்தானில் 4 இடங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 5 இடங்கள் என மொத்தம் 9 இடங்களில் பயங்கரவாதிகள் உள்ள அலுவலகங்கள், பயிற்சி முகாம்கள், அவர்களது வசிப்பிடங்கள் என 21 பயங்கரவாத நிலைகளை தரைமட்டமாக்கின. இந்நிலையில், இந்தியாவின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கைக்கு பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இங்கிலாந்து முன்னாள் பிரதமர் ரிஷி சுனக் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "மற்றொரு நாட்டில் இருந்து தங்கள் நாட்டின் எல்லைக்குள் பயங்கரவாத தாக்குதல்கள் நடத்தப்படுவதை எந்த ஒரு நாடும் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. பயங்கரவாத உள்கட்டமைப்பை தாக்கிய இந்தியாவின் நடவடிக்கை நியாயமானது" என்று பதிவிட்டுள்ளார். இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் பேசிய அந்நாட்டு எம்.பி. பிரீத்தி பட்டேல், "தங்கள் நாட்டை பாதுகாக்கவும், தங்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் பயங்கரவாதத்தை அழிக்கவும் இந்தியாவுக்கு முழு உரிமை உள்ளது" என்று தெரிவித்தார்.

# எல்லையில் பாகிஸ்தானியர் சுட்டுக்கொலை

**அமிர்தசரஸ், மே 09-**

ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை வான்வழி தாக்குதலாக மத்திய அரசு கடந்த 3 தினங்களுக்கு முன்பு தொடங்கியது. நள்ளிரவு 1 மணிக்குப்பின் இந்தியாவின் போர் விமானங்கள் பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலும் அதிரடியாக நுழைந்து அங்குள்ள பயங்கரவாத கட்டமைப்புகளை ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் மூலம் தாக்கி அழித்தன.

பாகிஸ்தானில் 4 இடங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 5 இடங்கள் என மொத்தம் 9 இடங்களில் பயங்கரவாதிகள் உள்ள அலுவலகங்கள், பயிற்சி முகாம்கள், அவர்களது வசிப்பிடங்கள் என 21 பயங்கரவாத நிலைகளை தரைமட்டமாக்கின. இதனிடையே ஆபரேஷன் சிந்தூருக்கு பதிலடியாக பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி இந்திய எல்லை பகுதிகளில் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக பஞ்சாப்பில் பாகிஸ்தான் ராணுவம் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியது. இந்த ஏவுகணை தாக்குதலை இந்திய வான்பாதுகாப்பு அமைப்பு முறியடித்தது.

ஏவுகணை எதிர்ப்பு அமைப்பால் இடைமறித்து அழிக்கப்பட்ட ஏவுகணை தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை பஞ்சாப்பின் அமிர்தசரசில் செயலிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில் பஞ்சாப்பின் பெரோஸ்பூர் பகுதியில் எல்லையை கடக்க முயன்ற பாகிஸ்தானியர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக பாகிஸ்தானிய ஊடுருவல்காரர் நேற்றுமுன்தினம் இரவு இருளைப் பயன்படுத்தி, சர்வதேச எல்லையின் பாதுகாப்பு வேலியை தாண்டி உள்ளே நுழைவதை எல்லை பாதுகாப்பு படையின கண்டனர். அப்போது எல்லை பாதுகாப்பு படையினரின் எச்சரிக்கையையும் மீறி அவர் நுழைய முயன்றதால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

# சென்னை விமானநிலையத்தில் 10 விமானங்கள் ரத்து

**சென்னை, மே 09-**

சென்னை விமான நிலையத்தில் 10 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்தியா பாகிஸ்தான் எல்லையில் போர் பதற்றம் காரணமாக வான் மண்டல கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து செல்லும் 5 விமானங்களும் சென்னைக்கு வரும் 5 விமானங்களும் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது.

விமானத்தில் பயணம் செய்யக்கூடிய பயணிகள் விமான நிறுவனத்தை தொடர்பு கொண்டு வழிமுறைகளை உறுதி செய்த பின்னர் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மறு உத்தரவு வரும் வரை இந்த திட்டம் அமலில் இருக்கும் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆபரேஷன் சிந்தூர் குறித்து

# பொய் செய்தி பரப்பிய சீன அரசு ஊடகத்திற்கு இந்தியா கண்டனம்

**புதுடெல்லி, மே 09-**

ஆபரேஷன் சிந்தூர் குறித்து பொய் செய்தி பரப்பிய சீன அரசு ஊடகத்திற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.


ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை வான்வழி தாக்குதலாக மத்திய அரசு நேற்று முன்தினம் தொடங்கியது. நள்ளிரவு 1 மணிக்குப்பின் இந்தியாவின் போர் விமானங்கள் பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலும் அதிரடியாக நுழைந்து அங்குள்ள பயங்கரவாத கட்டமைப்புகளை ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் மூலம் தாக்கி அழித்தன. பாகிஸ்தானில் 4 இடங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 5 இடங்கள் என மொத்தம் 9 இடங்களில் பயங்கரவாதிகள் உள்ள அலுவலகங்கள், பயிற்சி முகாம்கள், அவர்களது வசிப்பிடங்கள் என 21 பயங்கரவாத நிலைகளை தரைமட்டமாக்கின.

சுமார் 25 நிமிடங்கள் நடந்த இந்த அதிரடி வேட்டையில் சுமார் 70 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக முதல்கட்ட தகவல் வெளியாகி இருந்தன. இந்த தாக்குதலுக்கு "ஆபரேஷன் சிந்தூர்" என்று பெயரிடப்பட்டிருந்தது. இந்த தாக்குதலில் முப்படைகளும் ஈடுபடுத்தப்பட்டன.

இந்நிலையில் ஆபரேஷன் சிந்தூர் குறித்து பொய் செய்தி பரப்பிய சீன அரசு ஊடகத்திற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. முன்னதாக இந்திய போர் விமானங்களை பாகிஸ்தான் சுட்டு வீழ்த்தியதாக, சீன அரசு ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. சீன அரசின் ஊடகமான குளோபல் டைம்ஸ்-ல் இந்த செய்தி வெளியானதாக தெரிகிறது. இதற்கு, இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதன்படி தவறான தகவல்களை வெளியிடும் முன்பு உண்மையை சரிபார்க்க வேண்டும் என இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது. மேலும், பாகிஸ்தான் ஆதரவாளர்கள் பலர், ஆபரேசன் சிந்தூர் குறித்து வதந்தி பரப்புவதாகவும், பொறுப்பான ஊடகமாக குளோபல் டைம்ஸ் செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**09-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** முன்பு இருந்த நிலை மாறும். பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என யோகங்கள் ஏற்படலாம். தடைகளுக்குப் பின் விரும்பியது விரும்பியபடி கிடைக்கும்.

**ரிஷபம்:-** உங்கள் செயல்களில் வெற்றி பெற மிகுந்த பிராயாசை பட நேரும். சுயநம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். பயணத்தில் தடைகள் ஏற்படலாம்.

**மிதுனம்:-** உடல் நிலையில் அக்கறை தேவை, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நாள். வாகன சுகம் குறையும். காரியத் தடைகள் தூக்கம் குறையும்.

**கடகம்:-** மனத்தெம்பும், மன மகிழ்ச்சியும் ஏற்படும் நாள். மனைவியின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பணவரவு உண்டு. தன்னம்பிக்கை கூடும் நாள். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**சிம்மம்:-** தனலாபம், குடும்பத்தில் நிம்மதி, சுகம் ஆகியவை குறையும். முன்னர் இருந்த நிலைகள் மாறி பயம் குறையும். குடும்பத்தினரிடையே வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**கன்னி:-** நீண்ட நாட்களுக்குப் பிறகு பணவரவு உண்டு. எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு, இன்று பேச்சே மூலதனமாகும். வாகன யோகம் உண்டு. அரசால் ஆதாயம் உண்டு.

**துலாம்:-** கோபத்தைக் குறைத்துக் கொள்ளவும்., சோம்பல் அகற்றி சுறுசுறுப்புடன் இருப்பது நல்லது. திறமையுடன் செயல்பட்டாலும் இகழ்ச்சியே மிஞ்சும். வியாபாரிகளுக்கு இலாபங்கள் ஓரளவு குறையும்.

**விருச்சிகம்:-** பல நாட்களுக்குப் பிறகு தனலாபமும், எல்லா வகையிலும் நன்மையும் ஏற்படும் நாள். பிரிந்தவர் கூடி பேரின்பம் காணும் நாள். பெண்களால் லாபம் ஏற்படும். தடைகள் விலகி, கல்வியில் தேர்ச்சி ஏற்படும்.

**தனுசு:-** அரசு ஆதரவும், அதிகாரிகளால் அனுகூலம் ஏற்படும். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும் நாள். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும் நாள்.

**மகரம்:-** தெய்வீக காரிய ஈடுபாடு, தான தரும சிந்தனை ஏற்படும். தொழிலில் புதிய நல்ல திருப்பங்கள் ஏற்படும். இனிய பயணங்கள் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். உல்லாசப் பயணங்களால் உள்ளம் மகிழும்.

**கும்பம்:-** பிறருக்குத் தீமை செய்யும் எண்ணத்தைக் கைவிடுவது நல்லது. பெண்ணால் குடும்பத்தில் கலகம் உருவாகலாம். அஜீரணக் கோளாறு ஏற்படலாம். வழக்குகளில் வெற்றி கேள்விக்குறியாகும்.

**மீனம்:-** மனைவி மூலம் நன்மைகள் ஏற்படும். அரசால் ஆதாயம் கிட்டும். வாகன, போஜன சுகங்கள் கூடி, அவருக்கு என்ன பெரிய ஆள் எனப் பெயர் பெறுவீர்கள்.



**முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று பள்ளி கல்வித்துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள அரசு மாதிரிப் பள்ளிக்கான புதிய கட்டிடங்களைத் திறந்து வைத்து, தமிழ்நாட்டில் உள்ள அரசு மாதிரிப் பள்ளிகளில் பயின்று, மாநிலத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனமான தேசிய தொழில்நுட்ப கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பயின்றுவரும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.**

## போர் பதற்றம் எதிரொலி:

# பஞ்சாப், ராஜஸ்தானில் பள்ளிகள் மூடல்-போலீசார் விடுமுறை ரத்து

**ஜெய்ப்பூர், மே 09-**

போர் பதற்றத்தால் பஞ்சாப், ராஜஸ்தானில் பள்ளிகள் மூடப்பட்டுள்ளது போலீசாரின் விடுமுறையும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் நேற்றிரவு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த துல்லிய தாக்குதலில், 9 பயங்கரவாத உட்கட்டமைப்புகள் இலக்காக கொள்ளப்பட்டன. இதில், பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்தியா துல்லிய தாக்குதல் நடத்திய நிலையில், பதிலடி என்ற பெயரில் காஷ்மீரில் அப்பாவி பொதுமக்கள் மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் பலர் உயிரிழந்துள்ளனர். இதனால் இரு நாட்டு எல்லை பகுதிகளில் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது. இந்த நிலையில், எல்லையை ஒட்டிய பகுதிகளில் பதற்றம் நிலவுவதால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக பஞ்சாப் மாநிலம் முழுவதும் பொதுமக்கள் ஒன்று கூட தடை விதிக்கப்பட்டுள்ளது.

மறு அறிவிப்பு வரும் வரை பொது இடங்களில் கூட வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. பஞ்சாப் மற்றும் ராஜஸ்தானில் பாகிஸ்தான் எல்லையோரம் அமைந்துள்ள மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இரு மாநிலங்களிலும், போலீசாரின் விடுமுறை ரத்துசெய்யப்பட்டுள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை காவல்துறையினர் வார விடுமுறை, விடுப்பு எடுக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மரம் மனிதனின் உரம்

## பஞ்சாபில் பாகிஸ்தான் தாக்குதல்...?

# ஏவுகணையின் பாகங்கள் கண்டெடுப்பு



**பஞ்சாப், மே 09-**

பஞ்சாப் எல்லையில் பாகிஸ்தான் ஏவுகணையின் உதிரி பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்திய ராணுவம் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு தாக்கி அழித்துள்ளது. இதில் ஜெய்ஷ்-ஏ-முகமது அமைப்பின் தலைவர் மசூத் அசாரின் குடும்பத்தினர் 10 பேர் உள்பட 40-க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் தாக்குதலுக்கு தக்க பதிலடி தரப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் அறிவித்துள்ளார். இதனால் எல்லையில் போர் பதற்றம் நிலவி வருகிறது. ஜம்மு-காஷ்மீரின் பூஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் அத்துமீறி நடத்திய தாக்குதலில் 15 இந்தியர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் 40 பேர் காயமடைந்துள்ளனர். இந்நிலையில் பஞ்சாப் எல்லையில் பாகிஸ்தான் ஏவுகணை தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

பஞ்சாப் எல்லையில் அமிர்தசரஸ் - பட்டாலா சாலையில் ஜெதுவால் கிராமம் அருகே ஏவுகணையின் உதிரி பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது சீனாவிடம் இருந்து பாகிஸ்தான் வாங்கிய பிஎல்- 15இ ஏவுகணை எனத் தெரிய வந்துள்ளது. பாகிஸ்தானின் ஜே-10சி போர் விமானம் மூலமாக ஏவப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதுதொடர்பாக ராணுவ அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

## ராஜஸ்தான் - பாகிஸ்தான்

# எல்லையில் சந்தேகப்படுபவர்கள் யாராக இருந்தாலும் சுட உத்தரவு

**ஜெய்ப்பூர், மே 09-**

ராஜஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் உச்சக்கட்ட பதற்றம் நீடிக்கப்பட்டுள்ளது. அங்கு சந்தேகப்படுபவர்கள் யாராக இருந்தாலும் கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை வான்வழி தாக்குதலாக மத்திய அரசு நேற்று முன்தினம் தொடங்கியது. நள்ளிரவு 1 மணிக்குப்பின் இந்தியாவின் போர் விமானங்கள் பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலும் அதிரடியாக நுழைந்து அங்குள்ள பயங்கரவாத கட்டமைப்புகளை ஏவுகணைகள் மற்றும் டிரோன்கள் மூலம் தாக்கி அழித்தன.

பாகிஸ்தானில் 4 இடங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 5 இடங்கள் என மொத்தம் 9 இடங்களில் பயங்கரவாதிகள் உள்ள அலுவலகங்கள், பயிற்சி முகாம்கள், அவர்களது வசிப்பிடங்கள் என 21 பயங்கரவாத நிலைகளை தரைமட்டமாக்கின. இந்த தாக்குதலில் முப்படைகளும் ஈடுபடுத்தப்பட்டன. இந்தியாவின் வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்து, மேற்கு எல்லையில் தற்போது பாதுகாப்பு கணிசமாக பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ராஜஸ்தான், பாகிஸ்தானுடனான தனது எல்லையை முழுமையாக மூடி உள்ளது. இந்நிலையில் சர்வதேச எல்லைக்கு அருகில் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாட்டம் இருந்தால் கண்டதும் சுட எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள், எதிரிகளிடம் இருந்து எந்தவொரு பதிலடி அல்லது எல்லை தாண்டிய ஊடுருவல் முயற்சிகளையும் தடுக்கும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டவை என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. இதுதொடர்பாக ராஜஸ்தான் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறுகையில், "எல்லைக்கு அருகில் கண்டறியப்பட்ட எந்தவொரு சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைக்கும் எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க பணியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிலைமை பதட்டமாக உள்ளது, ஆனால் கட்டுப்பாட்டில் உள்ளது" என்று கூறினார்.

# தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டின் நிதி நிலைமை கவலை அளிக்கிறது

## எடப்பாடி பழனிசாமி விமர்சனம்



**சென்னை, மே 09-**

ஸ்டாலின் மாடல் ஆட்சியில் தமிழகத்தின் நிதி நிலைமை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது என்று அக்கட்சியின் எடப்பாடி பழனிசாமி கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், "தமிழகத்தில் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி 2021 முதல் நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்த ஆட்சியை 'ஸ்டாலின் மாடல் ஆட்சி' என்று ஆளுங்கட்சியினர் புகழ்ந்தாலும், பொதுமக்கள் நிர்வாகத் திறமையற்ற ஆட்சி, நிதிப் பற்றாக்குறை, கடன் வாங்குவதில் முதலிடம், சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருள் கேந்திரமாக மாறிய தமிழ் நாடு, தினசரி கொலைகள் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை, கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

ஸ்டாலின் மாடல் ஆட்சியில், நிர்வாகத்தில் ஒருங்கிணைப்பு இல்லாததால், திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம், உள்கட்டமைப்பு மேம்பாடு போன்றவை தாமதம் ஆகின்றன. உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்குச் சாவடி முறைகேடுகள், மறு வாக்குப் பதிவு, அதிகாரிகள் மிரட்டப்படுதல் போன்றவை அனைத்து ஊடகங்களிலும் வெளிவந்தன.

தமிழகத்தின் நிதி நிலைமை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. மாநில அரசின் கடன் சுமை அதிகரித்துள்ளது. கடன் வாங்குவதில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

மத்திய அரசிடமிருந்து நிதி பெறுவதில் தாமதம். உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டில் குறைபாடு ஆகியவை மாநில வளர்ச்சியை பெரிதும் பாதித்துள்ளன.

தமிழகத்தில் தொடர் கொலைகள், சாதி மோதல்கள், பாலியல் வன்கொடுமைகள், தனியாக வசிக்கும் முதியோர்கள் குறிவைத்துத் தாக்கப்படுதல், கொலை செய்யப்படுதல் போன்ற சட்ட விரோத சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

பெண்கள் பாதுகாப்பாக வாழ முடியாத மாநிலமாக, நகரமாக மாற்றியது தான் ஸ்டாலின் மாடல் தி.மு.க. அரசின் சாதனை. கடந்த நான்கு ஆண்டுகளாக, போதைப் பொருள் புழக்கம் மற்றும் பயன்பாடு தமிழகத்தில் பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது

இந்த நான்காண்டு கால ஆட்சியில், அதி.மு.க. காலத்தில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு நலத் திட்டங்கள் குறிப்பாக, அத்திக்கடவு-அவினாசி திட்டம், மெட்ரோ ரயில் திட்டம், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்று எங்களது சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆனால், இந்த நான்கு ஆண்டுகளில் ஸ்டாலின் மாடல் தி.மு.க. அரசு இது போல் ஒரு சாதனையை குறிப்பிட்டுக் கூற இயலுமா?" என்று விமர்சித்துள்ளார்.

# ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலில் முக்கிய தீவிரவாதி உயிரிழப்பு



**புதுடெல்லி, மே 09-**

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலில் ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் செயல்பாட்டுத் தலைவரான அப்துல் ரவூப் அசார் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். அந்தத் தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் வான்வழி தாக்குதலை மேற்கொண்டது. இதில் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இதனால் ஜம்மு காஷ்மீர் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலில் ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் செயல்பாட்டுத் தலைவரான அப்துல் ரவூப் அசார் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. காந்தகார் விமானக் கடத்தலுக்கு மூளையாக செயல்பட்ட அப்துல் ரவூப் அசார் இந்திய படைகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தது உறுதியாகியுள்ளது.

1999 ம் ஆண்டு டிசம்பர் 24 ம் தேதி நேபாளத்திலின் காத்மண்டுவிலிருந்து டெல்லிக்கு கிளம்பிய விமானத்தை பயங்கரவாதிகள் கடத்தினர். அந்த விமானத்தில் இருந்த பயணிகளை பணயக்கைதியாக வைத்து இந்திய சிறையிலுள்ள மசூத் அசார் உள்ளிட்ட மூன்று கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென பயங்கரவாதிகள் நிபந்தனை விதித்தனர். அப்போது பிரதமராக இருந்த வாஜ்பாய், பயணிகளை கருத்தில் கொண்டு மசூத் அசார், உமர் ஷேக் மற்றும் முஷ்டாக் அகமது சர்கார் ஆகியோரை விடுவிக்க உத்தரவிட்டார்.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட மசூத் அசார், தனது சொந்த ஊரான பஹவல்பூர் சென்று ஜெய்ஷ்-இ-முகமது என்ற அமைப்பை தொடங்கி இந்தியாவுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

# பாக். தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 13 பேர் பலி

**ஸ்ரீநகர், மே 09-**

பூஞ்சில் எல்லைக் கட்டுப்பாடு கோடு அருகே பாகிஸ்தான் அத்துமீறி நடத்திய தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக, இந்திய படைகள் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில், பயங்கரவாதிகளுக்கு பதிலடி கொடுத்தன.

இந்திய படைகளின் தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தான் ராணுவம் எல்லை கட்டுப்பாட்டு கோட்டை ஒட்டிய கிராமங்களில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, அத்துமீறலில் ஈடுபட்டது.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் படைகள் நடத்திய கடுமையான துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுவீச்சு தாக்குதலில் இதுவரை 13 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கூடுதலாக, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு முழுவதும் பாகிஸ்தான் நடத்திய அத்துமீறல்களின் விளைவாக பூஞ்சில் 44 பேர் உட்பட மொத்தம் 59 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஆபரேஷன் சிந்தூர்' திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியா நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து, ஜம்மு காஷ்மீரில் உள்ள முக்கிய கிராமங்களை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகவும் தீவிரமான பீரங்கி மற்றும் டிரோன் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

நேற்று முன்தினம் (மே 7ம் தேதி) மற்றும் நேற்று (8 ஆம் தேதி)களின் இடைப்பட்ட இரவில், ஜம்முவில் உள்ள குப்வாரா,

பாரமுல்லா, உரி மற்றும் அக்னூர் செக்டார்களுக்கு எதிரே உள்ள பகுதிகளில் பாகிஸ்தான் ராணுவம் சிறிய ஆயுதங்கள் மற்றும் பீரங்கித் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி தூண்டுதலற்ற முறையில் துப்பாக்கிச் சூடு நடத்தியது.

இதற்கு இந்திய ராணுவம் தக்க பதிலடி கொடுத்தது.

### பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியீடு:

# புதுச்சேரியில் தனியார் பள்ளிகளில் 98.5 சதவீதம் பேர் தேர்ச்சி

**புதுச்சேரி, மே 09-**

புதுச்சேரி, காரைக்காலில் உள்ள தனியார் பள்ளிகளின் பிளஸ் 2 தேர்ச்சி விழுக்காடு 98.5 சதவீதமாகும். இம்முறை அரசுப் பள்ளிகள் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்துக்கு மாற்றப்பட்டதால் தனியார் பள்ளிகள் மட்டுமே இத்தேர்வை எழுதின.

புதுச்சேரி, காரைக்காலில் இதுவரை தமிழக பாடத்திட்டத்தை பின்பற்றி வந்தனர். இம்முறை அரசுப் பள்ளிகள் அனைத்தும் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்துக்கு மாறிவிட்டன. தனியார் பள்ளிகள் மட்டுமே தமிழக அரசு பாடத்திட்டத்தை கடைபிடிக்கின்றன. கடந்த மார்ச் 2025-ல் நடைபெற்ற 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியைச் சார்ந்த 3,881 மாணவர்களும் 3,683 மாணவிகளும் என மொத்தம் 7,564 மாணவர்கள் தேர்வு எழுதினர்.

நேற்று வெளியான தேர்வு முடிவுகளின் படி தனியார் பள்ளிகளில் பயின்ற 7,453 மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 3,794 மாணவர்களும் 3,659 மாணவிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதன் சதவீதம் 98.5 ஆகும். இதில் புதுச்சேரியில் 98.5 சதவீதமாகவும், காரைக்காலில் 98.1 சதவீதமாகவும் தேர்ச்சி விகிதம் உள்ளது.

# அமைச்சர் துரைமுருகன் மருத்துவமனையில் அனுமதி

**சென்னை, மே 09-**

தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சளி பிரச்சினை காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தற்போது துரை முருகனின் உடல் நிலை சீராக இருப்பதாகவும், தொடர்ந்து மருத்துவர்கள் கண்காணிப்பில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து துரைமுருகன் இன்று அல்லது நாளை டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அமைச்சரவையில் இலாகா மாற்றப்பட்ட நிலையில் அமைச்சர் துரைமுருகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. துரைமுருகனிடம் இருந்த கனிமம் மற்றும் சுரங்கத்துறை, அமைச்சர் ரகுபதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் ரகுபதி வசம் இருந்த சட்டத்துறை, அமைச்சர் துரைமுருகனுக்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீர்வளத்துறையுடன் சேர்த்து, இனி சட்டத்துறையையும் அமைச்சர் துரைமுருகன் நிர்வகிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடர்கிறது: அமைச்சர் கிரண் ரிஜிஜு

**புதுடெல்லி, மே 09-**

பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடர்கிறது என்று மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறினார்.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய ராணுவம் நடத்திய 'ஆபரேஷன் சிந்தூர்' தாக்குதல் தொடர்பாக புதுடெல்லியில் உள்ள நாடாளுமன்ற நூலக கட்டிடத்தில் நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், உள் துறை அமைச்சர் அமித் ஷா, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, திரிணமுல் காங்கிரஸ் எம்.பி., சந்தீப் பந்தோபாத்யாய, தி.மு.க. எம்.பி., டி.ஆர். பாலு, சமாஜ்வாதி கட்சி எம்.பி., ராம் கோபால் யாதவ், ஆம் ஆத்மி கட்சியின் சஞ்சய் சிங், சிவ சேனா(யுபிடி) எம்.பி. சஞ்சய் ராவத், தேசியவாத காங்கிரஸ்(எஸ்.பி.) எம்.பி. சுப்ரியா சுலே, பிஜு ஜனதா தள எம்.பி. சஸ்மித் பத்ரா, சி.பி.எம். எம்.பி. ஜான் பிரிட்டாஸ், ஐக்கிய ஜனதா தள எம்.பி. சஞ்சய் ஜா, ஏஐஎம்ஐஎம் எம்.பி. அசாதுதின் ஒவைசி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தநிலையில், டெல்லியில் அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு பிறகு மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- நாடு ஒரு முக்கியமான காலகட்டத்தில் சென்று கொண்டிருக்கும் போது அனைத்து அரசியல் தலைவர்களும் முதிர்ச்சியைக் காட்டினர். அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு அரசாங்கத்திற்கு ஆதரவாக நிற்க உறுதிபூண்டுள்ளன. எம்.பி.க்களிடமிருந்து சில ஆலோசனைகள் வந்தன. பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடர்கிறது. என்ன நடக்கிறது என்பதை வெளிப்படையாக தெரிவிக்க இயலாது என்றார்.

### பிளஸ் 2 பொதுத் தேர்வில்

# கணினி அறிவியல் பாடத்தில் மட்டும் 9,536 பேர் 100-க்கு 100 மதிப்பெண்கள்

**சென்னை, மே 09-**

பிளஸ் 2 பொதுத் தேர்வில் கணினி அறிவியல் பாடத்தில் அதிகபட்சமாக 9,536 பேர் 100-க்கு 100 மதிப்பெண்கள் எடுத்துள்ளனர்.

பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகளை நேற்று (மே 8) காலை 9 மணிக்கு பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்டார். இதில் பாடவாரியாக 100-க்கு 100 முழு மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை விவரம் வெளியாகியுள்ளது. கணினி அறிவியலில் அதிகமானோரும், விலங்கியலில் குறைவானோரும் முழு மதிப்பெண் பெற்றுள்ளனர்.

தமிழ்: 135

இயற்பியல்: 1,125

வேதியியல்: 3,181

உயிரியல்: 827

கணிதம்: 3.022

தாவரவியல்: 269

விலங்கியல்: 36

கணினி அறிவியல்: 9,536

வணிகவியல் 1,624

கணக்குப் பதிவியல்: 1,240

பொருளியல்: 556

கணினிப் பயன்பாடு: 4,208

வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல்: 273

* ஏதேனும் ஒரு பாடத்தில் 100 மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை 26,887

* ஏதேனும் ஒரு பாடத்தில் 100 மதிப்பெண்கள் பெற்ற அரசுப்பள்ளி மாணாக்கர்களின் எண்ணிக்கை - 2,853

### தெலங்கானா மாநிலத்தில் பயங்கரம்:

# கண்ணிவெடி தாக்குதலில் 3 காவல் அதிகாரிகள் பலி..!

**ஐதராபாத், மே 09-**

தெலங்கானாவில் மாவோயிஸ்டுகளின் கண்ணிவெடித் தாக்குதலில் அம்மாநில காவல் துறை அதிகாரிகள் 3 பேர் பலியாகியுள்ளனர்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் எல்லையில் அமைந்துள்ள தெலங்கானாவின் முலுகு மாவட்டத்தில் காவல் துறையினர் நேற்று (மே 8) காலை 7.30 மணியளவில் வெடிகுண்டுகளைக் கண்டறியும் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, வஸீது காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அங்கு மாவோயிஸ்டுகள் நிறுவியிருந்த ஐ.ஈ.டி. எனப்படும் நவீன கண்ணிவெடியானது வெடித்து சிதறியது.

இதில், 3 போலீஸ் அதிகாரிகள் சம்பவயிடத்திலேயே பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிகுண்டுகள் அனைத்தும் அங்குள்ள வனப்பகுதிகளில் தடைசெய்யப்பட்ட மாவோயிஸ்ட் அமைப்பினர் நிறுவியுள்ளதாகவும், இந்தச் சம்பவம் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் காவல் துறை உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

முன்னதாக, சத்தீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்டுகளாக செயல்பட்டு வந்த நபர்கள் பெரும்பாலானோர் தெலங்கானா காவல் துறையினரிடம் சரணடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

### தொடர்ந்து விழிப்போடு இருங்கள்:

# பல்வேறு துறை அதிகாரிகளுக்கு பிரதமர் நரேந்திரமோடி அறிவுறுத்தல்

**புதுடெல்லி, மே 09-**

மாநில அதிகாரிகள், கள நிறுவனங்களுடன் இணைந்து நெருங்கிய ஒத்துழைப்பை பேண வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தி உள்ளார்.

கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். அந்தத் தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் வான்வழி தாக்குதலை மேற்கொண்டது. இதில் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இதனால் ஜம்மு காஷ்மீர் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

எல்லையோரத்தில் பூஞ்ச், பாரமுல்லா, குப்வாரா, ஜம்மு, சம்பா, கத்துவா, ரஜோரி மாவட்டங்களில் பள்ளி, கல்லூரி உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டன.

ஸ்ரீநகர் விமான நிலையத்தையொட்டிய பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகள் மூடப்பட்டன. இதுபோல, காஷ்மீர் பல்கலையின் அனைத்து தேர்வுகளும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன.

போர் சூழல் காரணமாக பஞ்சாம் மாநிலம் குருதாஸ் பூரில் இரவில் முழுமையாக மின் தடை செய்யப்படுகிறது. இந்நிலையில், டெல்லியில் பல்வேறு துறை செயலாளர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார். அப்போது நாடு முக்கியமான கால கட்டத்தில் உள்ளது. தொடர்ந்து விழிப்போடு இருக்க வேண்டும். மாநில அதிகாரிகள், கள நிறுவனங்களுடன் இணைந்து நெருங்கிய ஒத்துழைப்பை பேண வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். தற்போதுள்ள சூழலில் அமைச்சங்களின் திட்டமிடல் ஆயத்தம் உள்ளிட்டவற்றை மோடி மதிப்பீடு செய்தார். முன்னதாக ,டெல்லியில் பிரதமர் மோடியை அவரது இல்லத்தில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் சந்தித்து பேசினார்.

# ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் 100 பயங்கரவாதிகள் பலி: ராஜ்நாத்சிங்



**புதுடெல்லி, மே 09-**

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் பயங்கரவாதிகள் 100 பேர் உயிரிழந்ததாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் கூறினார்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத இலக்குகளை குறிவைத்து 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற தாக்குதலை இந்திய ராணுவம் வெற்றிகரமாக நடத்தி உள்ளது.இந்த தாக்குதலை தொடர்ந்து, மத்திய மந்திரிசபை கூட்டம் அவசரமாக கூடியது. பிரதமர் மோடி தலைமை தாங்கினார்.

இந்திய படைகளின் ஏவுகணை தாக்குதல் பற்றி மத்திய மந்திரிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.பின்னர், பாதுகாப்புக்கான மந்திரிசபை குழு கூட்டமும் நடந்தது.

இந்த நிலையில், 'ஆபரேஷன் சிந்தூர்' தாக்குதல் பற்றி விளக்கம் அளிப்பதற்காக அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டத்துக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்தது. 90 நிமிடங்கள் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், ராணுவம் எடுத்த நடவடிக்கை தொடர்பக அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. கூட்டத்தில் ராஜ்நாத்சிங் ராணுவம் எடுத்த நடவடிக்கை எடுத்த குறித்து விளக்கம் அளித்தார்.

அப்போது, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் பயங்கரவாதிகள் 100 பேர் உயிரிழந்ததாக ராஜ்நாத்சிங் கூறினார்.

லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகம்மது பயங்கரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

### எல்லையில் தொடரும் பதற்றம்:

# 27 விமான நிலையங்கள் மூடல்; 400 விமானங்களின் சேவை ரத்து

**புதுடெல்லி, மே 09-**

எல்லையில் பதற்றம் 27 விமான நிலையங்கள் மூடப்பட்டது. நாடு முழுவதும் 400 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டன.

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த 22-ம் தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் நேபாள நாட்டை சேர்ந்த ஒருவர் உள்பட சுற்றுலாவுக்காக சென்றிருந்த 26 பேர் பலியானார்கள். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானில் இருந்து செயல்பட்டு வரும் லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான 'தி ரெசிஸ்டண்ட் பிரண்ட்' பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இந்நிலையில், பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் நேற்றிரவு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த துல்லிய தாக்குதலில், 9 பயங்கரவாத உட்கட்டமைப்புகள் இலக்காக கொள்ளப்பட்டன.

இதில், பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இந்திய வான் வெளி வழியே பாகிஸ்தானுக்கு செல்லும் 25 விமான வழிகளை இந்தியா மூடியுள்ளது. இதுபற்றி அதிகாரிகள் கூறும்போது, அடுத்த உத்தரவு வரும் வரை, பாகிஸ்தான் வான்வெளிக்குள் நுழைய கூடிய 25 விமான வழிகள் மூடப்பட்டு உள்ளன.

இந்நிலையில், எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக நேற்று 27 விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

ஸ்ரீநகர், ஜம்மு, லே, சண்டிகர், அமிர்தசரஸ், லூதியானா, பாட்டியாலா, பதிண்டா, ஹல்வாரா, பதான்கோட், பந்தர், சிம்லா, ஹாஹல், தரம்சாலா, கிஷன்ஹர்,

ஜெயசால்மர் உள்ளிட்ட 27 விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதன் காரணமாக இந்தியா முழுவதும் 400 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

# உத்தரகாண்ட்: ஹெலிகாப்டர் விபத்தில் 5 பேர் பலி

**டேராடூன், மே 09-**

உத்தரகாண்டில் தனியார் ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாசி மாவட்டத்தில் காலை 9 மணியளவில் கங்கோத்ரி நோக்கி தனியார் ஹெலிகாப்டர் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அப்போது எதிர்பாராத விதமாக ஹெலிகாப்டர் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ஹெலிகாப்டரில் இருந்த 5 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர், மேலும் இருவர் காயமடைந்தனர். விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இதனையடுத்து, ராணுவ வீரர்கள், பேரிடர் மேலாண்மை குழு, ஆம்புலன்ஸ், வருவாய் குழுவினர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். விபத்தில் உயிரிழந்தவர்களின் உடலை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



பயங்கரவாதத்திற்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு ஆதரிக்கிறது. நாட்டின் பாதுகாப்பு குறித்து பேசும் நிகழ்வில் பிரதமர் பங்கேற்கவில்லை. மதவாதம் குறித்து பேசும் பா.ஜ.க. இந்த விவகாரத்தை மத ரீதியாக அணுகாமல் நியாயமான முறையில் அணுக வேண்டும்.

**- டி.ஆர்.பாலு**



பாகிஸ்தான் மீது போர் தொடுத்து, அதனால் அப்பாவி மக்கள் கொடும் துயரத்திற்கு ஆளாகும் நிலையை எந்த சூழ்நிலையிலும் இந்திய அரசு உருவாக்கிவிடக் கூடாது. போர் மூண்டால் இந்தியா ,பாகிஸ்தான் இரு நாடுகளும் கடுமையான பாதிப்பை சந்திக்க நேரிடும் என்பதையும் இந்திய அரசு உணர்ந்து செயல்பட வேண்டும்.

**- வைகோ**



பஹல்காம் தாக்குதலுக்கு இந்தியா சரியான பதிலடியை கொடுத்துள்ளது. இந்திய மண்ணில் பயங்கரவாத தாக்குதலை நடத்தினால், என்ன மாதிரியான விளைவுகள் இருக்கும் என்பதை காட்டுவதற்காகத் தான். இந்தியாவுடன் போர் தொடக்க விரும்பினால், பாகிஸ்தான் 4 நாட்கள் கூட தாங்காது. நீண்ட போரை நடத்த பாகிஸ்தானால் முடியாது.

**- சசி தரூர்**



கடந்த 4 ஆண்டுக் காலத் தி.மு.க. ஆட்சியில் தொடர்ந்து தமிழ்நாட்டில் குற்ற நடவடிக்கைகள் குறைந்து வருகின்றன. கடந்த 12 ஆண்டுகளில் 2024-ம் ஆண்டில் தான் கொலை சம்பவங்கள் குறைவாக நடந்திருக்கின்றன. கொலை குற்ற விகிதம் ஒரு லட்சம் மக்களுக்கு தேசிய சராசரி 2.2 என்றால், தமிழ்நாட்டில் அது 1.1 ஆகக் குறைந்திருக்கிறது.

**- ஆர்.எஸ்.பாரதி**

ஈரோடு நல்லூர் ஊராட்சி புதுப்பாளையத்தில்

## புதிய கட்டிடம் மற்றும் நியாயவிலைக்கடை: எம்.பி.ஆ.ராசா திறந்து வைத்து மக்களுக்கு பொருட்களை வழங்கினார்



ஈரோடு மே 9-

கோபிநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சி புதுப்பாளையத்தில் புதிய நியாயவிலைக்கடையை கட்டிடம் திமு க துணைப் பொதுச்செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான .ஆ.ராசா புதிய கட்டிடம் மற்றும் நியாயவிலைக்கடையை திறந்து வைத்து மக்களுக்கு பொருட்களை வழங்கினார். நல்லூர் ஊராட்சி நல்லூரில் புதிய நியாயவிலைக்கடைக்கு அடிக்கல் நாட்டுவிழா மற்றும் வெங்கநாயக்கன்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு உட்பட்ட பனையம்பள்ளி ஊராட்சி சொலவனூரில் புதிய பகுதி நேர நியாயவிலைக்கடையை திறந்து வைத்து மக்களுக்கு பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணைப்பதிவாளர்(பொது விநியோகத் திட்டம்) சு.மாதேஸ், மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம். பொது விநியோகத் திட்ட கூட்டுறவு சார்பதிவாளர்/கள அலுவலர் .சரவணன், சங்க செயலாட்சியர்.சாமியப்பன், பவானிசாகர் கூட்டுறவு சார்பதிவாளர்/கள அலுவலர் .இரா.அம்சவல்லி . ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றிய கூட்டுறவு பிரச்சார அலுவலர் மு.மோகன் . கூட்டுறவு சங்க செயலாளர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்

## ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பாக செயற்குழு கூட்டம்: அமைச்சர் சு.முத்துசாமி பங்கேற்பு



ஈரோடு மே 9-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆணைக்கு இணங்க ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பாக செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில் எக்ஸ் எம் பி கந்தசாமி ,ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈ பிரகாஷ் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் , ஈரோடு மாநகராட்சியின் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் V. செல்வராஜ் , மாநகர செயலாளர் மு. சுப்பிரமணியம் , மாநில நிர்வாகிகள் சச்சிதானந்தம், குறிஞ்சி சிவக்குமார், வீரமணி ஜெயக்குமார், திண்டல் குமரசாமி திண்டல் மணிராசு, மாவட்ட நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், குமார் முருகேஸ், பொன்னுசாமி, ராதாகிருஷ்ணன், திலகவதி, கனிமொழி, மண்டல குழு தலைவர்கள் ப.க.பழனிச்சாமி, காட்டு சுப்பு (எ) சுப்பிரமணியம் ,சசிகுமார் ,தண்டபாணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம், ஒன்றிய கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள் குமாரவடிவேலு, .செல்வராஜ், அக்னி சந்துரு, பொ.ராமசந்திரன் வி.சி.நடராஜன் தண்டபாணி, வில்லரசம்பட்டி முருகேசன், லட்சுமண குமார், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய, பேருர் கழக செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள், மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.

## குன்னூர் பகுதியில் ரூ.1.48 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள்

### கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்தியாளர்களுடன் சென்று ஆய்வு



ஊட்டி, மே.09-

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்தியாளர் பயணத்தின்போது நேரில் பார்வையிட்டார். பின்னர் கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சரின்; ஆணைக்கிணங்க, நீலகிரி மாவட்டத்தில், நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சி முகமை, போன்ற துறைகளின் மூலம் மக்களின் தேவைகளான குடிநீர், மின்சாரம், சாலை, குடியிருப்பு வீடுகள், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடர்ந்து கண்காணித்து, அதனை விரைவாகவும், தரமாகவும் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், ரூ.1.19 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பேருந்து நிலையம் முன்புறம் கூரை அமைக்கும் பணி, வர்ணம் பூசும் பணி, தடுப்புச்சுவர் அமைக்கும் பணி, தரை மற்றும் சுவர் பகுதியில் டைல்ஸ் ஒட்டும் பணிகள் உள்ளிட்ட பணிகள் பார்வையிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, குன்னூர் ஊராட்சி ஒன்றியம், எடப்பள்ளி ஊராட்சியில் ராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் திட்டத்தின்கீழ் ரூ.5 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கான அலுவலக கட்டிட கட்டுமான பணியும், அணியாடா பகுதியில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமையல் கூடம் கட்டுமான பணியும், அணியாடா பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தடுப்பணை கட்டுமான பணியும், அணியாடா பகுதியில் வசிக்கும் கெங்கம்மாள் என்பவருக்கு கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீட்டின் கட்டுமான பணியும்; என மொத்தம் குன்னூர் நகராட்சி மற்றும் குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மற்றும் நடைபெற்று முடிந்த வளர்ச்சித்திட்டப்பணிகள் நேரில் பார்வையிடப்பட்டு, பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதுபோன்ற நமது மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் நகராட்சி நிர்வாகத்துறையின் மூலம் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. பொதுமக்களின் தேவைக்கேற்ப ஊராட்சி மற்றும் நகராட்சி பகுதிகள்; இது போன்ற பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள அனைத்து வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, குன்னூர் நகராட்சி ஆணையாளர் இளம்பரிதி, நகராட்சிப் பொறியாளர் வேலுசாமி, குன்னூர் வட்டாட்சியர் ஜவஹர், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர், விஜயா உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## 20-வது ரோஜா கண்காட்சி ஊட்டி ரோஜா பூங்காவில் நாளை நடைபெறுகிறது: முன்னேற்பாடு பணிகள் தீவிரம்



ஊட்டி, மே.09-

ஊட்டி ரோஜா பூங்காவில் நாளை(10-ந்தேதி) நடைபெறும் 20-வது ரோஜா கண்காட்சிக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. 40,000 செடிகளில் ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்குகிறது.

மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும், சுற்றுலா தலங்களை கண்டு ரசிக்கவும் தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவிலான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இவ்வாறு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கவும், கவரவும் மாவட்டம் நிர்வாகம் சார்பில் கோடைக்காலத்தில் கோடை விழா நடத்தப்படுகிறது. அதன்படி இந்தாண்டு கோடை விழாவின் முதல் நிகழ்ச்சியான காய்கறி கண்காட்சி கோத்தகிரியில் தொடங்கி முடிந்துவிட்டது.

இதையடுத்து மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி, பழ கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. தாவரவியல் பூங்கா மலர் கண்காட்சிக்கு நிகராக ரோஜா பூங்காவில் ரோஜா பூக்களை கொண்டு கண்காட்சி நடைபெறும்.

இந்த ஆண்டு ரோஜா கண்காட்சி நாளை தொடங்கி 12-ந் தேதி வரை 3 நாட்கள் நடக்கிறது. இதையொட்டி சுற்றுலா பயணிகளை கவர்வதற்காக பல்வேறு அலங்காரங்கள் செய்யும் பணிகள் கடந்த சில நாட்களாக தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த பணிகள் இன்று (வெள்ளிக்கிழமை) மாலைக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறுகையில், ரோஜா பூங்காவில் 4000 வகைகளில் 40,000 பல்வேறு வண்ண கலர்களில் ரோஜா செடிகள் உள்ளது. தற்போது சுற்றுலாப் பயணிகளுக்காக பூக்கள் பூத்துக் குலுங்குகிறது.

இந்த மாதம் முழுவதும் ரோஜா பூக்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கலாம். தற்போது வரும் சுற்றுலா பயணிகளுக்கு இடையூறு இல்லாமல் அலங்கார பணிகள் நடைபெற்று வருகிறது.

பூங்காவில் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீளம் என பல வகை ரோஜாக்கள் பூத்துக் குலுங்குகிறது. மேலும், கிணற்றை சுற்றி ஹெரிடேஜ் கார்டன், 2 இடங்களில் செயற்கை நீர்வீழ்ச்சிகள் உள்ள தோடு, அலங்கார செடிகள் அழகாக காட்சி தரும் வகையில் சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது என்றனர்.

## பிளஸ் - 2 தேர்வு ஈரோடு மாவட்டம் 97.98 சதவீதம் தேர்ச்சி: மாநில அளவில் 2 -ம் இடம் பிடித்து சாதனை

ஈரோடு, மே.09 -

தமிழகத்தில் பிளஸ்- 2 பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 3 -ந் தேதி தொடங்கி 25 ஆம் தேதி நிறைவடைந்தது. இதனைத் தொடர்ந்து பிளஸ் -2 விடைத்தாள் திருத்தும் பணி நடைபெற்றது. இந்த பணிகள் முடிக்கப்பட்டு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டது. இதை அடுத்து பிளஸ் - 2 பொதுத்தேர்வு முடிவு நேற்று (வியாழக்கிழமை) காலை வெளியாகும் என பள்ளி கல்வித்துறை அறிவித்திருந்தது. அதன்படி இன்று காலை பிளஸ் - 2 பொதுத்தேர்வு முடிவு வெளியானது. வழக்கம்போல் இந்த ஆண்டும் மாணவர்களை விட மாணவிகள் அதிக அளவில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.ஈரோடு மாவட்டத்தை பொருத்தவரை பிளஸ் - 2 பொதுத்தேர்வை 222 பள்ளிகளைச் சேர்ந்த 10,403 மாணவர்களும், 11 ஆயிரத்து 876 மாணவிகளும் என மொத்தம் 22,279 மாணவ - மாணவிகள் எழுதியிருந்தனர். இதில் 10 ஆயிரத்து 113 மாணவர்களும், 11 ஆயிரத்து 716 மாணவிகளும் என மொத்தம் 21 ஆயிரத்து 829 மாணவ -மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி விகிதம் 97.98 சதவீதம் பெற்று மாநில அளவில் ஈரோடு மாவட்டம் 2 -ம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. இதில் மாணவர்கள் தேர்ச்சி விகிதம் 97. 21 ஆகும். மாணவிகள் தேர்ச்சி விகிதம் 98.65 ஆகும். மாணவர்களை விட மாணவிகளே அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்தம் 222 பள்ளிகளில் 107 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளன. இதில் ஈரோடு மாவட்டத்தில் 113 அரசு பள்ளிகளில் 4854 மாணவர்களும், 6431 மாணவிகளும் இன மொத்தம் 11,285 பேர் பிளஸ் - 2 பொதுத்தேர்வு எழுதினர். இதில் 4643 மாணவர்களும், 6290 மாணவிகளும் என மொத்தம் 10 ஆயிரத்து 933 மாணவ - மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி விகிதம் 96.88 ஆகும். மாநில அளவில் அரசு பள்ளி மாணவர்கள் தேர்ச்சி விகிதத்திலும் ஈரோடு மாவட்டம் 2-ம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. 113 அரசு பள்ளிகளில் 37 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளன. இன்று காலை பிளஸ்-2 பொதுத்தேர்வு முடிவு வருவதையொட்டி மாணவ மாணவிகள் அந்தந்த பள்ளிக்கு சென்று தேர்வு முடிவுகள் தெரிந்து கொண்டனர். இதேபோல் சில செல்போன்களில் தங்களது தேர்வு முடிவுகளை ஆர்வத்துடன் தெரிந்து கொண்டனர்.

## எஸ்.வி.என். பள்ளி பிளஸ் 2 தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை



ஈரோடு, மே 9:

ஈரோடு அடுத்த கொங்கம்பாளையத்தில் உள்ள எஸ்விஎன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் பொதுத் தேர்வு எழுதிய 258 மாணவ-மாணவிகளும் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பள்ளி அளவில் 600க்கு 594 மதிப்பெண்கள் பெற்று ஜெ.சுகாஷ் என்ற மாணவன் முதலிடமும், 590 மதிப்பெண் பெற்று எஸ்.தாரிகா, எஸ்.நிகிதா ஆகியோர் இரண்டாமிடமும், 589 மதிப்பெண்கள் பெற்று எஸ்.முகேஷ் மூன்றாமிடமும் பிடித்து சாதனை படைத்தனர். முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ-மாணவிகளை பள்ளியின் தலைவர் பி.விவேகானந்தன், தாளாளர் பி.சம்பத்குமார், அறக்கட்டளையின் செயலாளர் எஸ்.ரங்கசாமி, பொருளாளர் ஏ.துரைசாமி, இணை செயலாளர் வி.பி.சின்னசாமி, பள்ளியின் முதல்வர், ஆசிரிய இயக்குநர்கள், ஆசிரியை, ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் ஆகியோர் பரிசு வழங்கி பாராட்டினர்.

## ஈரோடு கொங்கு கல்வி நிலைய பள்ளி மாணவ-மாணவிகள் பிளஸ் 2 தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று சாதனை



ஈரோடு, மே 9:

ஈரோடு ரங்கம்பாளையம் கொங்கு கல்வி நிலையம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 2 பொதுத் தேர்வு எழுதிய 388 மாணவ-மாணவிகள் சிறந்த மதிப்பெண் பெற்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று சாதனை படைத்தனர். இதில், பிளஸ் 2 பொதுத்தேர்வில் 600க்கு 591 மதிப்பெண்கள் பெற்று பி.ஜே.தனசஞ்சய், எம்என்.ரஞ்சித், ஜி.ஜி.யாழினி, டி.எம்.குரு விதுன் ஆகிய 4 மாணவ-மாணவிகளும் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்றனர். பி.தமிழ்செல்வம் 590 மதிப்பெண் பெற்று இரண்டாமிடமும், பி.அனுசுயா 589 மதிப்பெண் பெற்று மூன்றாமிடம் பிடித்தனர். கணினி அறிவியல் பாடத்தில் 34 பேரும், கணிதத்தில் 10 பேரும், கணினி பயன்பாட்டில் 9 பேரும், வணிகவியல் மற்றும் கணக்குப்பதிவியலில் தலா 8 பேரும், பொருளியல் பாடத்தில் 3 பேரும், இயற்பியல், வேதியல், வணிக கணிதம் பாடத்தில் தலா ஒருவரும் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். மேலும், தமிழ் பாடத்தில் 19 பேரும், ஆங்கிலத்தில் 2 பேரும் 99 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். தேர்வு எழுதிய 388 மாணவ-மாணவிகளில் 550 மதிப்பெண்களுக்கு மேல் 73 பேரும், 500க்கு மல் 197 பேரும், 450 மதிப்பெண்களுக்கு மேல் 320 பேரும், 400க்கு மேல் 379 பேரும் பெற்றுள்ளனர்.

பாராட்டு விழா

கொங்கு கல்வி நிலையம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் சிறப்பான மதிப்பெண் பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பாராட்டு விழா பள்ளியில் நேற்று நடைபெற்றது. விழாவிற்கு பள்ளியின் தலைவர் எம்.சின்னசாமி தலைமை வகித்தார். தாளாளர் கே.செல்வராஜ் முன்னிலை வகித்தார். இதில், பிளஸ் 2 பொதுத்தேர்வில் பள்ளியில் முதல் மூன்று மதிப்பெண்கள் எடுத்த மாணவ-மாணவிகளை பாராட்டி கேடயம் வழங்கப்பட்டது. சிறந்த மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற மாணவ-மாணவிகளையும், உறுதுணையாக இருந்த ஆசிரியர், ஆசிரியைகளையும், பெற்றோருக்கும் பாராட்டி நன்றி தெரிவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில், பள்ளியின் பொருளாளர் ஆர்.குணசேகரன், உதவி தலைவர்கள் எஸ்.கே.சோமசுந்தரம், ஆர்.எம்.தெய்வசிகாமணி, இணை செயலாளர் டி.மீனாட்சிசுந்தரம், இணை பொருளாளர் வி.நாகராஜன், பள்ளியின் முதல்வர் டி.நதியா, பள்ளியின் செயற்குழு உறுப்பினர் சர்வலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## முன்னெச்சரிக்கை நடவடிக்கை: ஈரோடு ரெயில் நிலையத்தில் பயணிகள் உடமை தீவிர சோதனை

ஈரோடு, மே. 9 -

காஷ்மீர் மாவட்டம் பகல்காம் சுற்றுலா தளத்தில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 26 சுற்றுலா பயணிகள் பரிதாபமாக இறந்தனர். இந்த தாக்குதல் நாடு முழுவதும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. தாக்குதலுக்கு பின்னால் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் இருப்பது தெரியவந்தது. இதை அடுத்து இந்தியா பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டது. நேற்று நள்ளிரவு இந்தியா பாகிஸ்தானில் உள்ள 9 தீவிரவாதிகள் முகாம்களை குண்டுகள் பொலிந்து அழித்தன. இதனை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் பாதுகாப்பு ஒத்திகை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து ஈரோடு ரயில் நிலையத்தில் இன்று ரயில்வே போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். ரயில் நிலையம் நுழைவுப் பகுதியில் ரயில்வே போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பயணிகள் உடைமைகள் தீவிர பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மெட்டல் டிடெக்டர் கருவி மூலம் பயணிகள் உடமை சோதனை செய்த பிறகு அவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இதேபோல் ஒவ்வொரு நடைமேடையாக ரயில்வே போலீசார் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். ஈரோடுக்கு வரும் ரயில்களையும் பயணிகளையும் அவர்கள் உடமைகளையும் சோதனை செய்து வருகின்றனர். தேவையின்றி சுற்றி தெரியும் நபர்களைப் பிடித்து விசாரணை நடத்தி அவர்களை எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர்.

## +2 பொதுத் தேர்வு: ஈரோடு திண்டல் வேளாளர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி 100 சதவீத தேர்ச்சி



ஈரோடு மே 9-

+2 பொதுத் தேர்வில் தேர்வு எழுதிய 330 மாணவியரும் முதல் வகுப்பில் 100% தேர்ச்சி பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். எஸ். ரோஹிதா 593/600 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடம் பெற்றுள்ளார். ஏ.ஜே. ஹரிணிஸ்ரீ 590/600 மதிப்பெண்களும் 6. சஞ்சுஸ்ரீ 588/600 மதிப்பெண்களும் பெற்று முறையே இரண்டு மற்றும் மூன்றாமிடங்களைப் பெற்றுள்ளனர். வேதியியல், கணிதம், வணிகவியல், கணிணி அறிவியல் மற்றும் கணிணிப் பயன்பாடுகள் பாடத்தில் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். +2 பொதுத் தேர்வில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவியரைப் பள்ளியின் தலைவர் சி. ஜெயக்குமார், தாளாளர் எஸ்.டி. சந்திரசேகர், நிர்வாகி சி. பாலசுப்ரமணியம், முதல்வர் செல்வி வெ. லதா நிர்வாக அலுவலர் எல். சென்னியப்பன் மற்றும் ஆசிரியைகள் பாராட்டினர்.



ஊட்டியிலுள்ள மீன்வளத்துறை அலுவலகத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில்செயல்படுத்தப்படும்திட்டங்களின்செயல்பாடுகள்குறித்துமாவட்டகலெக்டர்லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மீன்வளத்துறை உதவி இயக்குநர் கவுசல்யா தேவி உட்பட பலர் உள்ளனர்.

# ஊட்டி ஆவின் வளாக வாகன நிறுத்துமிடத்தில் கழிப்பிட வசதி ஏற்படுத்தித்தர சுற்றுலா பயணிகள் வலியுறுத்தல்

ஊட்டி, மே.9-

ஊட்டி ஆவின் வளாகத்தில் கழிப்பறை வசதி இல்லாததால், சுற்றுலா பயணிகள் அவதிப்படுகின்றனர்.

சர்வதேச சுற்றுலாத்தலமான நீலகிரிக்கு ஒவ்வொரு ஆண்டும் கோடை சீசனான ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் 10 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகளில் 90 சதவீதம் பேர் ஊட்டிக்கு வருகின்றனர்.

சுற்றுலா பயணிகள் வருகையை முறைப்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள இ-பாஸ் நடைமுறை ஜூன் 30-ந் தேதி வரை தொடரும் என்பதால், திங்கள் முதல் வெள்ளி வரை வார நாட்களில் 6 ஆயிரம் வாகனங்களும், வார இறுதி நாட்களில், 8 ஆயிரம் வாகனங்கள் அனுமதிக்கப்படுகிறது. இதனுடன் கூடுதலாக தேவைப்பட்டால் மலர்காட்சி நாட்களில் 500 வாகனங்களுக்கு அனுமதி அளிக்கலாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதால், கடந்த, 3ம் தேதி முதல் போக்குவரத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டு, ஒரு வழிப்பாதை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஊட்டியில் இருந்து செல்லும் வாகனங்கள் கோத்தகிரி, குஞ்சப்பனை வழியாகவும், மேட்டுப்பாளையத்தில் இருந்து மேல் நோக்கி வரும் வாகனங்கள் பர்லியார், குன்னூர் வழியாகவும் ஊட்டிக்கு வர அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேபோல் ஊட்டிக்குள் பகல் நேரத்தில் கனரக வாகனங்கள் அனுமதி கிடையாது

மேலும் சுற்றுலா வரும் வாகனங்களை ஊட்டி நகருக்குள் அனுமதிக்காமல் புறநகர் பகுதியில் நிறுத்தப்படுகிறது, கூடலூர் வழியில் வரும் வாகனங்கள் தலைகுந்தா பகுதியிலும், குன்னூர் சாலை வழியாக வரும் வாகனங்கள் ஊட்டி ஆவின் வளாகத்தில் நிறுத்தப்படுகிறது. ஆவின் வளாகத்தில் ஒரே சமயத்தில் 100 வாகனங்கள் நிறுத்த இடம் உள்ளது. இங்கு தினசரி 1000-க்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். மேலும் சுற்றுப் பேருந்துகளும் இயக்கப்படுவதால் சுற்றுலா பயணிகள் நடமாட்டம் அங்கு அதிகமாக உள்ளது. பெரிய வாகனங்களுக்கு அதிகபட்சமாக ஆவின் நிர்வாகம் சார்பில் ரூ.250 வசூலிக்கப்படுகிறது.

ஆனால் அங்கு அடிப்படை வசதிகள் சரியாக இல்லை, ஆயிரம் நபர்கள் வரும் இடத்தில் நான்கு கழிப்பறைகள் மட்டுமே உள்ளது, நான்கு கழிப்பறைகளும் ஆண்கள், பெண்கள் என இருபாலரும் பயன்படுத்தும் வகையில் உள்ளது.

ஆனால் கழிப்பறை கதவுகளை பூட்ட முடியாத வகையில் லாக் உடைந்து கிடக்கிறது. கழிப்பறைகளும் பராமரிப்பு இல்லாமல் உள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் பெரும் அவதிப்படுகின்றனர் இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:-

ஊட்டியில் உள்ள சீதோசன நிலைக்கு, அதிகம் வியர்க்காது என்பதால் இங்கு வந்த உடனே இயற்கை உபாதை செல்ல வேண்டிய தேவை உள்ளது. தெரியாத இடத்தில் அவசரமாக கழிப்பறைக்கு சென்றால் அங்குள்ள கதவுகளை பூட்ட முடியவில்லை, எப்போது யார் வந்து கதவை திறப்பார்கள் என்ற எண்ணத்தில் சரிவர கழிப்பறை செல்ல முடியவில்லை, கழிப்பறைகள் பராமரிப்பு இல்லாமல் துர்நாற்றம் வீசுவதால் நோய் பரவும் அபாயம் உள்ளது. சர்வதேச சுற்றுலாத்தலம் என்று பெயரில் மற்றும் இருந்தால் போதாது செயல்பாட்டிலும் இருக்க வேண்டும் உடனடியாக கழிப்பறை கதவுகளை சரி செய்து தேவைப்பட்டால் கூடுதல் கழிப்பறைகள் அமைக்க வேண்டும் இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ஒற்றை காட்டு யானை நடமாட்டம்: ஊட்டி தொட்டபெட்டா மலை சிகரத்துக்கு செல்ல 3-வது நாளாக தடை

ஊட்டி, மே.9

காட்டு யானை நடமாட்டம் காரணமாக ஊட்டி தொட்டபெட்டா மலை சிகரத்துக்கு செல்ல 3 நாளாக சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில்; 65 சதவீதத்திற்கும் மேல் வனப் பகுதியை கொண்ட மாவட்டம் என்பதால் காட்டு யானை முதல் புலி வரை பல்வேறு உயிரினங்கள் வசித்து வருகின்றன. மாவட்டம் முழுவதும் கடந்து சில நாட்களாக மனித வனவிலங்கு மோதல் அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பாக காட்டு யானைகள் நடமாட்டம் குன்னூர் மற்றும் கூடலூர் பகுதியில் மட்டுமே இருந்து வந்தது .இந்தநிலையில் குன்னூர் பர்லியார் பகுதியில் சுற்றித்திரிந்த காட்டு யானை ஒன்று வழி தவறி கடந்த 5-ந் தேதி மாலை குன்னூரில் இருந்து பல கிலோமீட்டர் வனப்பகுதி மற்றும் தேயிலை தோட்டங்கள், பல கிராமங்களை கடந்து தென்னிந்தியாவின் மிக உயரமான மலை சிகரமான ஊட்டி தொட்டபெட்டா மலை சிகரத்துக்குள் நுழைந்தது. இதனால் சுற்றுலா பயணிகள் வியாபாரிகள் வெளியேற்றப்பட்டனர். 100 ஆண்டு கால வரலாற்றில் முதல்முறையாக இந்த பகுதிக்கு காட்டு யானை வந்துள்ள சம்பவம் வனத்துறையினரை திணறடித்துள்ளது. யானை வழித்தடங்கள் அழிப்பு, பலா மரங்கள் வெட்டப்பட்டது உள்பட பல்வேறு காரணங்களால் யானை வழிமாறி வந்திருக்கலாம் என்றும், ட்ரோன் கேமிரா மூலம் யானையை வீடியோ எடுத்ததால் மிரண்டு போய் இந்த பக்கம் வந்துள்ளதாகவும் வன ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே யானையை வனப்பகுதிக்குள் விரட்டலாமா? அல்லது மயக்க மருந்து செலுத்தி பிடிக்கலாமா? என வனத்துறையினர் தீவிர யோசனையில் ஈடுபட்டு யானையை கண்காணித்து வருகின்றனர். ஆனால் யானை தொட்டபெட்டா பகுதியில் சுற்றி வருகிறது. இந்த நிலையில் நேற்று மாலை பட்டர் கம்பை பகுதியில் யானை சுற்றியது. இதன் காரணமாக மூன்றாவது நாளாக நேற்று தொட்டபெட்டா மலை சிகரத்துக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது. தேவைப்படும் சமயங்களில் பட்டாசு வீசி யானையை அதனுடைய வழக்கமான பாதைக்கு செல்ல வைக்கும்; முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர். இதற்கிடையே பட்டாசு வீசி யானையை விரட்ட வேண்டாம் என வன ஆர்வலர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ஊட்டி தீட்டுக்கல் பகுதியில்

# ஏற்கனவே சீல் வைக்கப்பட்ட கட்டிடம் விதிமுறைகளை மீறி இயங்கியதால் மீண்டும் சீல்



ஊட்டி, மே 09-

ஊட்டி தீட்டுக்கல் பகுதியில் ஏற்கனவே சீல் வைக்கப்பட்ட கட்டிடம் விதிமுறைகளை மீண்டும் இயங்கியதால் தற்போது மீண்டும் சீல் வைக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுசூழலை பாதுகாக்கும் வண்ணம் கடந்த 1993-ம் ஆண்டு மாஸ்டர் பிளான் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்தின் படி 7 மீட்டர் உயரத்துக்கு மேல் கட்டிடம் கட்டக் கூடாது என்பது உள்பட பல்வேறு விதிமுறைகள் உள்ளன.

எனினும், வசதி படைத்த பலர் உள்ளாட்சி அமைப்புகளிடம் முறையாக அனுமதி பெறாமலும், விதிமுறைகளை மீறியும் பல கட்டிடங்களை கட்டியுள்ளனர். தற்போதும் அனுமதி பெறாமல் விதிமுறைகளை மீறி பல கட்டிடங்கள் கட்டப்படுவது தொடர்கிறது.

இதற்கிடையே சிலர் குடியிருப்பிற்கான அனுமதி பெய்து வணிகரீதியில் பயன்படுத்துவது போன்ற விதிமீறல்களும் நடக்கின்றன. இந்நிலையில் ஊட்டி நகராட்சிக்குட்பட்ட கவர்னர்சோலை, தீட்டுக்கல் பகுதியில் உரிய அனுமதியின்றி விதிமீறலுடன் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு கடந்த 2019-ம் ஆண்டு நகராட்சி நிர்வாகம் சீல் வைத்து நடவடிக்கை எடுத்தது.

இந்தநிலையில் சீல் வைக்கப்பட்ட கட்டிடத்தில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதாக நகராட்சிக்கு நிர்வாகத்திற்கு புகார் வந்தது. இதன் பேரில் ஊட்டி நகராட்சி ஆணையாளர் ஸ்டேன்லி பாபு உத்தரவின் பேரில் நகரமைப்பு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது கடந்த 2019ம் ஆண்டு வைக்கப்பட்ட சீலை எவ்வித அனுமதியுமின்றி சட்டவிரோதமாக அகற்றி பயன்படுத்தி வந்தது தெரியவந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து அந்த கட்டடத்திற்கு தற்போது மீண்டும் சீல் வைக்கப்பட்டது.

நாட்டுக்கு சுதந்திரம்
கிடைத்தது நமக்கு
பெருமை
நாட்டை சுத்தமாக
வைப்பது நமது கடமை

# டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களில் உங்களுக்குப் பிடித்த பிரத்தியேக நறுமணமுள்ள திரவியம் நேரடியாக தயாரிக்கும் வாய்ப்பு

கோவை, மே.09-

நம்முடைய நினைவுகளை மீண்டும் எழச்செய்யும் ஆற்றல் கொண்ட ஒன்றாக முக்கியத்துவம் பெற்றவை நறுமணமளிக்கும் திரவியகள். இன்றும் கூட நம்மில் பலருக்கு. தாயின் வாசம் ஒருவிதமான அன்பையும், அரவணைப்பையும், பாதுகாப்பையும் நினைவுப்படுத்தும் ஒன்றாகவே இருந்து வருகிறது. இந்த அன்னையர் தினத்தில், உங்கள் அம்மா எப்போதும் நினைவு கூர்ந்து சந்தோஷப்படும் வகையிலான பரிசை அளிப்பதன் மூலம் தாயுடனான பாசப்பிணைப்பை கௌரவித்து கொண்டாட டைட்டன் வேர்ல்ட் வரவேற்கிறது. அம்மாவின் நேசத்தைப் போலவே காலம் தாண்டியும் நறுமணமாகத் திகழும் பரிசு இது. நீங்கள் டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களில் உங்களது ரசனைக்கு ஏற்ற நறுமணத்தில் நறுமண திரவியத்தை அங்கேயே உருவாக்கிடும் இன் ஸ்டோர் அனுபவமாக இருக்கும் வகையில் இந்த வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மே மாதம் 10 மற்றும் 11-ம் தேதிகளில் இந்தியா முழுவதிலும் உள்ள 163 டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களில், உங்களது தனிப்பட்ட விருப்பத்திற்கேற்ற வகையில் பிரத்தியேகமாக நறுமணத் திரவத் தயாரிப்பில் வாடிக்கையாளர்கள் பங்கேற்கலாம். வாடிக்கையாளர்கள் தங்களது வாழ்க்கையில் மிகவும் நேசிக்கும் பெண்ணான தாய்க்கு, மறக்க முடியாத ஒரு நேரடி நறுமண அனுபவத்தை வழங்கும் இந்த அற்புத வாய்ப்பைத் தவறவிடாதீர்கள் என டைட்டன் வேர்ல்ட் உங்களை அன்போடு அழைக்கிறது. டைட்டன் வேர்ல்ட் விற்பனை நிலையங்களுக்கு வரும் வாடிக்கையாளர்கள் நறுமணத் திரவியத்திற்கு அடிப்படையான எண்ணெய் திரவங்களிலிருந்து 50 மில்லி லிட்டர் அளவிலான நறுமண திரவியத்தை தங்களது விருப்பத்திற்கேற்ற வகையில் உருவாக்கலாம். அன்னையர் தினத்தைக் கொண்டாடும் விதமாக தங்களது அம்மாவை முன்னிலைப்படுத்தியோ அல்லது அவருடன் சேர்ந்தோ, அம்மாவை ஆச்சரியப்படுத்தும் வகையில் நறுமண திரவியங்களை தங்கள் கையாலேயே தயாரிக்கும் வாய்ப்பினை டைட்டன் வேர்ல்ட் வழங்குகிறது. இந்த அனுபவம் மகிழ்ச்சியையும் பழைய ஞாபகங்களையும் நினைவுப்படுத்துவதோடு தனித்துவமாக உருவாக்கிய நறுமணத் திரவியத்தை மனம் முழுவதிலும் பரவச் செய்கிறது.



திருத்துறைப்பூண்டி மருந்தீஸ்வரர் ஆலய சித்திரை தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

# பிளஸ் 2 பொதுத்தேர்வில் சென்னை மாநகராட்சி பள்ளி மாணவர்கள் 88.12 சதவீதம் தேர்ச்சி

சென்னை, மே- 9

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பிளஸ் 2 அரசு பொதுத்தேர்வில்88.12 சதவீத மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**தேர்ச்சி**

சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் 35 மேல்நிலைப்பள்ளிகள்சிறப்பாக செயல்பட்டு வருகிறது.2024-2025ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் 2,328 மாணவர்கள் மற்றும் 3,059 மாணவியர் என மொத்தம் 5,387 மாணவ,மாணவியர் தேர்வு எழுதினார்கள். இதில் 1,949 மாணவர்கள் (83.70%) மற்றும் 2,798(91.46%) மாணவியர் என மொத்தம் 4,747 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சிபெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 88.12% ஆகும். (கடந்த ஆண்டின் தேர்ச்சி விகிதம்87.13% ஆகும்.) பாடவாரியான தேர்ச்சி சதவிகிதத்தில் கணினி பயன்பாடுகள் பாடப்பிரிவில் 26, கணினி அறிவியல் பாடப்பிரிவில் 19, கணக்குப் பதிவியல் பாடப்பிரிவில் 3, வேதியியல் பாடப்பிரிவில் 2, பொருளியல் பாடப்பிரிவில் 2, வரலாறு பாடப்பிரிவில் 1, புவியியல்பாடப்பிரிவில் 1 என மொத்தம் 54 மாணவ, மாணவியர்கள் 100/100 மதிப்பெண்கள்பெற்றுள்ளனர்.

மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் 65 மாணவ, மாணவியர்கள் 551க்கு மேல்600 வரை மதிப்பெண்களும், 247 மாணவ. மாணவியர்கள் 501லிருந்து 550 வரைமதிப்பெண்களும், 541 மாணவ, மாணவியர்கள் 451லிருந்து 500 வரை மதிப்பெண்களும்பெற்றுள்ளனர்.மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களில் உள்ள பள்ளிகள் : புல்லாஅவென்யூ சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 600 மதிப்பெண்களுக்கு 591மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தையும், பெரம்பூர், எம். எச். சாலை-சென்னை பெண்கள்மேல்நிலைப்பள்ளி 600 மதிப்பெண்களுக்கு 588 மதிப்பெண்கள் பெற்றுஇரண்டாமிடத்தையும், பெரம்பூர், எம்.எச். சாலை-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி600 மதிப்பெண்களுக்கு 583 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.

தேர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களில் உள்ள பள்ளிகள்: நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 100 சதவீதத்துடன்முதலிடத்தையும், புலியூர் சென்னை மேல்நிலைப்பள்ளி 98.61சதவீதத்துடன் இரண்டாம்இடத்தையும், சைதாப்பேட்டை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி 97.36சதவீதத்துடன் மூன்றாம் இடத்தையும், நெசப்பாக்கம் சென்னை மேல்நிலைப்பள்ளி 97.22சதவீதத்துடன் நான்காம் இடத்தையும், திருவான்மியூர் சென்னை மேல்நிலைப்பள்ளி95.59 சதவீதத்துடன் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மழைநீர்
உயிர்நீர்

# ஊட்டியில் நடைபெறும் கண்காட்சிகளில் உள்ளூர் மக்களுக்கு இலவச நுழைவு கூப்பன் வழங்க வேண்டும்

## கலெக்டருக்கு படுக தேச பார்ட்டி வேண்டுகோள்

ஊட்டி, மே,09-

ஊட்டியில்(நீலகிரியில்) நடைபெறும் கண்காட்சிகளில் உள்ளூர் மக்களுக்கு இலவச நுழைவு கூப்பன் வழங்க வேண்டும் என மாவட்ட கலெக்டருக்கு படுக தேச பார்ட்டி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த பார்ட்டியின் நிறுவனர் தலைவர் மஞ்சை மோகன் கலெக்ருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது-

நாளை(10-ந் தேதி) முதல் தொடங்கவுள்ள நீலகிரி மாவட்ட கோடை விழா நிகழ்ச்சிகள் மற்றும் ஊட்டி மலர் கண்காட்சி விழாவில் உள்ளூர் மக்கள் பங்கேற்று சிறப்பித்திட. நீலகிரி மக்கள் அனைவருக்கும் நிரந்தர விலாசம் கொண்டை ஆதார் அடையாள அட்டையின் அடிப்படையில் இலவச நுழைவுக்கூப்பன் அளித்திட வேண்டுமாய் படுக தேச பார்ட்டி சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்..

நீலகிரி மாவட்டத்தில் ஆதார் அட்டை அடையாளத்துடன் நிரந்தரமாக வாழும் மக்கள் ஊட்டியில்; உள்ள அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா, கோத்தகிரி நேரு பூங்கா, கூடலூர் வாசனை திரவிய பூங்கா போன்ற சுற்றுலா தலங்களை கண்டு குதூகலித்திடவும், மலைகளின் அரசியாம் நீலகிரியின் அதியசங்களை பேணி காத்திடவும் உள்ளூர் மக்களுக்கு நீலகிரி மக்களின் ஆதார் அடையாள அட்டையின் அடிப்படையில் அனுமதிக்க வேண்டுமாய் படுக தேச பார்ட்டி சார்பாக கேட்டுக் கொள்கின்றோம்..

நீலகிரியின் சுற்றுச்சூழலுக்கு நிரந்தரமாக பசுமை சூழலை ஏற்படுத்திய இ-பாஸ் நடைமுறையால் , பல்வேறு இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளது என்ற வியாபார பெருமக்களின், இன்னல்கள் தீரவும்,

நீலகிரி மாவட்டத்து மக்களால் வியாபாரம் அதிகரிக்கவும் கண்டிப்பாக முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

மேலும் நீலகிரி மக்களுக்கு நீலகிரியின் சுற்றுச்சூழலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஆயிரக்கணக்கான பள்ளி, கல்லூரி மாணவர்கள் நீலகிரின் சுற்றுலா தலங்களைப் பற்றியும், மலைகளின் அரசியாம் நீலகிரி மாவட்டத்தின் பெருமைகளை உலகம் அறிய செய்யும் விதமாக நீலகிரி மாவட்டத்தை காத்து வரவும் , எதிர் காலத்தில் நீலகிரி சுற்றுச்சூழலை காத்திட தங்களை முழுமனதுடன் அர்பணிக்கும் நாள் உருவாகும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை ..எனவே மரியாதைக்குரிய நீலகிரி மாவட்ட கலெக்டர் அவர்கள் மாவட்ட மக்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது, நீலகிரி சுற்றுலா தலங்களை கண்டுக்களித்து செல்ல ஆவணம் செய்திடுமாறு படுக தேச பார்ட்டி சார்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ்நாடு அரசு,
மதுரை மாவட்டம்- பரவை சிறப்பு நிலை பேரூராட்சி

ந.க.எண். 301/ 2025 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள் : 29.04.2025

மதுரை மாவட்டம் பரவை சிறப்புநிலை பேரூராட்சியில் சிறப்பு நிதி திட்டம் 2025-2026ன் கீழ் பணிகள் செய்திட தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறையின் இணையதளம் வாயிலாக மீது எந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 15.05.2025 மாலை 3.30 மணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்தப்படிவங்களை 29.04.2025 ம் தேதி முதல் 15.05.2025 ம் தேதி வரை உள்ள இணையதளம் மூலம் http://tntenders.gov.in என்ற தளத்திற்குள் சென்று பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் டேவணி தொகை பேரூராட்சி வங்கி கணக்கு எண் 1460101030633 IFS Code CNRB0001460 RTGS முறையில் செலுத்த வேண்டும்

சிறப்பு நிதி திட்டம் 2025-2026

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில்.ரூ | டேவணி தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி படிவ விலை ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.3 காட்டுநாயக்கர் தெரு மெயின் தெரு. 1.4 வது மற்றும் 5 வது தெருவரை தார்ச்சாலை. காட்டுநாயக்கன் 2வது தெருவில் சிமெண்ட் சாலை மேம்பாடு செய்தல் மற்றும் காட்டுநாயக்கன் 3வது தெருவில் பேவர் பிளாக் சாலை மேம்பாடு செய்தல் | 93.00 | 93000 | 10000 | 120 நாட்கள் |

செ.ம.தொ.இ./2030 / ஒப்பந்தப்புள்ளி / 2025

செயல் அலுவலர்
பரவை சிறப்புநிலை பேரூராட்சி, மதுரை மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை சிறப்புநிலை பேரூராட்சி

ந.க.எண்.170 / 2025 /அ1 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்: 06.05.2025

திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை சிறப்பு நிலை பேரூராட்சியில் TURIP & Additional Allocaiton (for KNMT) திட்டம் 2025-2026 இன் கீழ் ரூ.82.50 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பு சுவருடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன

1) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து 21.05.2025 பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

2) ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம், நாள் மற்றும் இடம் :

| | | |
|---|---|---|
| அ | முன் கலந்தாய்வு கூட்டம் | 14.05.2025 காலை 11.00 மணி பத்தமடை பேரூராட்சி அலுவலகம். |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 21.05.2025 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | 21.05.2025 மாலை 3.30 மணி |

3) ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள்பெறப்பட்டு திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 1985 / ஒப்பந்தப்புள்ளி / 2025

செயல் அலுவலர் (பொ),
சிறப்பு நிலை பேரூராட்சி பத்தமடை - 627 453
திருநெல்வேலி மாவட்டம்.

பேரையூர் பேரூராட்சி
மதுரை மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மதுரை மாவட்டம், பேரையூர் பேரூராட்சியில் 2025-2026ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு (TURIF) திட்டத்தின்கீழ், தார்ச்சாலை அமைக்கும் பணியினை செய்திட ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைகள் முறை) ஆன்லைன் வாயிலாக மட்டும் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதளமுகவரிகளிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :
அ) முன் கலந்தாய்வு கூட்டம் - 14.05.2025 காலை 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி ஆன்லைனில் சமர்ப்பித்தல் - 20.05.2025 மாலை 3.00 மணி வரை
3. மேற்படி வலைதளம் வழியாக அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிக்குரிய 1% டேவணித் தொகையினை (முன் வைப்பு தொகை ரூ.81,000/-), ஆன்லைன் மூலம் செலுத்தப்பட்டு, அதற்கான ஒப்புகைச்சீட்டினை மேற்படி ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுடன் இணைத்து 20.05.2025 செவ்வாய் கிழமை அன்று பிற்பகல் 03.00-க்குள் மேற்படி வலைதளத்தில் பதிவேற்றம் செய்திட வேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆன்லைன் திறத்தல்-20.05.2025 மாலை 3.30 மணி

ந.க.எண்.151/2025 நாள் : 30.04.2024

(ஒப்பம்) கே.கே.குருசாமி
தலைவர்
பேரையூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம்.

(ஒப்பம்) ம.மணிகண்டன்
செயல் அலுவலர்
பேரையூர் பேரூராட்சி, மதுரை மாவட்டம்.

செ.ம.தொ.இ/2006/ஒப்பந்தப்புள்ளி/2025

# சென்னை பெரம்பூரில் திமுக அரசின் மாபெரும் சாதனை விளக்க அணிவகுப்பு: அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்

சென்னை,மே.09

தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு நிகழ்த்தியுள்ள நான்காண்டு சாதனைகள் குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் "திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு சாதனை விளக்க அணிவகுப்பை" சென்னை, பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் மாபெரும் சாதனை விளக்க அணிவகுப்பை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இம்மாபெரும் சாதனை விளக்க அணிவகுப்பில் பாரம்பரிய நடனம் மற்றும் மேளம், பள்ளி மாணவ, மாணவியர்களின் பேண்ட் வாத்தியம், சாரண சாரணியர்களின் அணிவகுப்பு, ராஜ மேள முழக்கங்கள், வெளிநாட்டவர்கள் நம் பாரம்பரிய உடையுடன் அணிவகுப்பு, மகளிர் சுயஉதவிக் குழுவினர்களின் அணிவகுப்பு, மகளிர் உரிமைத்தொகை குழுவினர்களின் அணிவகுப்பு, பிங்க் ஆட்டோ பெண்களின் அணிவகுப்பு, நான் முதல்வன், செஸ் – ஆக்கி – முதல்வர் கோப்பை – கார் பந்தையம் விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு, தமிழ் புதல்வன், புதுமைப் பெண் ஆகிய திட்டங்களால் பயன்பெற்ற 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்களின் அணிவகுப்பு, காலை உணவு திட்டம், வட சென்னை வளர்ச்சி திட்டம் மற்றும் மக்களைத் தேடி மருத்துவம் என பல்வேறு சாதனைகளை விளக்குகின்ற வகையில் 3 வாகனங்களின்



அணிவகுப்பு இடம்பெற்றது.

இச்சாதனை விளக்க அணிவகுப்பு லூர்து பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் தொடங்கி கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முடிவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் மேயர்ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள்தாயகம் கவி, .வெற்றி அழகன்,.ஜோசப் சாமுவேல், பிரபல திரைப்பட நடிகர்கள் 'மெட்ராஸ் அன்பு' திரு.கலையரசன், 'பிக்பாஸ் புகழ்' திருமதி.அர்ச்சனா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கே.எஸ்.ரவிச்சந்திரன், பகுதி செயலாளர்கள்ஐசிஎப்.முரளிதரன்நாகராஜன்,சுதாகர், வேலு,எம்.டி.ஆர். நாகராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்சந்துரு, மகேஷ்குமார், மாநில மாணவரணி செயலாளர்ராஜுவ்காந்தி, கழக செய்தி தொடர்பாளர் திரு.ராஜா தமிழ்மாறன், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் திரு.பி.கே.பாபு, மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர்கள்.சரிதா மகேஷ்குமார், பி.கே.மூர்த்தி, எழும்பூர் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் யாழினி, மாமன்ற உறுப்பினர்கள்புனிதவதி எத்திராஜன்,.சுதா தீனதயாளன், .ராஜேஷ்வரி ஸ்ரீதர், .தாவூத்பீ.சாரதா,.யோகபிரியா, .அமுதா, தி ஸ்ரீதணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை

மின் ஒப்பந்தபுள்ளி அழைப்பு எண். COLRD/1110/2025-A5 நாள்: 08.05.2025

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. தென்காசி மாவட்டம் - மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் கடையம், கீழப்பாவூர், குருவிகுளம் மற்றும் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களில் - முதல்வரின் கிராம சாலை மேம்பாடு திட்டம் (MGSMT) 2025-26 திட்டத்தின் கீழ் 664.15 லட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைத்தல் பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை (இரு உறை முறையில்) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தபுள்ளி 09.05.2025 முதல் 21.05.2025 வரை இலவசமாக www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் எடுத்துக்கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 21.05.2025 பிற்பகல் 3.00 மணி வரை
5. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 21.05.2025 பிற்பகல் 4.00 மணி

செ.ம.தொ.இ / 2027 / ஒப்பந்தப்புள்ளி / 2025

திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தென்காசி.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## போர்ப் பதற்றம் எதிரொலி:
# பஞ்சாப் - மும்பை போட்டி அகமதாபாத்துக்கு மாற்றம்



**அகமதாபாத், மே 09-**

போர்ப் பதற்றம் எதிரொலியால் பஞ்சாப் - மும்பை போட்டி அகமதாபாத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**ஆபரேஷன் சிந்தூர்...**

நடப்பு ஐ.பி.எல். தொடரின் போட்டிகள் இந்தியாவில் உள்ள பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. போட்டிகள் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கின்றன. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் ஜம்மு - காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகள் பாகிஸ்தான் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இந்திய ராணுவத்தினர் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்கள் மீது அதிரடியாகத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல் மேலும் தீவிரமடைந்திருக்கிறது.


**விமான நிலையங்கள் மூடல்...**

இதனால், இந்தியாவில் வடமாநிலங்களில் உள்ள பல்வேறு விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. ஹிமாசல பிரதேச மாநிலம், தர்மசாலாவில் உள்ள விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டதை அடுத்து, வரும் ஞாயிற்றுக்கிழமை (மே 11) அங்கு நடைபெற வேண்டிய பஞ்சாப் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் ஆட்டம் குஜராத் மாநிலம் அகமதாபாத்துக்கு இடமாற்றம் செய்யப்படுள்ளது. இதனை குஜராத் கிரிக்கெட் சங்கத்தின் செயலர் அனில் பட்டேல் உறுதிபடுத்தியுள்ளார்.

**இடமாற்றம்...**

இதுகுறித்து அனில் பட்டேல் கூறுகையில், "பி.சி.சி.ஐ. எங்களிடம் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் நாங்கள் அதை உறுதி செய்துள்ளோம். இந்தப் போட்டி மதியம் நடைபெறும்" என்று தெரிவித்தார். தர்மசாலாவில் நடைபெறும் பஞ்சாப் - டில்லிஆட்டத்தில் விளையாடும் வீரர்கள் எவ்வாறு குஜராத் வருவார்கள் என்று தெரியவில்லை. சண்டீகர் விமான நிலையமும் மூடப்பட்டுள்ளது. அதேவேளையில் சாலை வழியாக தில்லிக்குச் சென்றால் 10 மணி நேரம் எடுத்துக் கொள்ளும். இது பி.சி.சி.ஐ. சவாலாகவே இருக்கும் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சென்னை வெற்றியால் நெருக்கடி:
# பிளே ஆப்-க்கு முன்னேறுமா கொல்கத்தா?



**கொல்கத்தா, மே 09-**

சென்னை வெற்றியால் கொல்கத்தாவின் பிளே ஆப் வாய்ப்புக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

**சென்னை வெற்றி...**

ஐ.பி.எல். போட்டியின் 57-ஆவது ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில், நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸை புதன்கிழமை வீழ்த்தியது. முதலில் கொல்கத்தா 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 179 ரன்கள் சேர்க்க, சென்னை 19.4 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழந்து 183 ரன்கள் சேர்த்து வென்றது. பிளே ஆப் பந்தயத்தில் நிலைக்க இந்த ஆட்டத்தில் வென்றாக வேண்டிய கொல்கத்தா, தற்போது நூலிழை நம்பிக்கையுடன் காத்திருக்கிறது. தொடர்ந்து 4 தோல்விகளை சந்தித்த சென்னை, இந்த வெற்றியின் மூலம் மீண்டிருக்கிறது.

**ரஹானே - நரைன் அபாரம்...**

முன்னதாக இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற கொல்கத்தா, பேட்டிங்கை தேர்வு செய்தது. கொல்கத்தா இன்னிங்ஸை தொடங்கிய ரஹ்மானுல்லா குர்பாஸ் 11 ரன்களுக்கு ஆட்டமிழக்க, சுனில் நரைன் விரைவாக ரன்கள் சேர்த்தார். ஒன் டவுனாக வந்த கேப்டன் அஜிங்க்ய ரஹானே - நரைன் ஜோடி 2-ஆவது விக்கெட்டுக்கு 58 ரன்கள் சேர்த்தது. நரைன் 4 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 26 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். தொடர்ந்து அங்கிரிஷ் ரகுவன்ஷி 1 ரன்னுக்கே பெவிலியன் திரும்ப, மனீஷ் பாண்டே களம் புகுந்தார். இந்நிலையில் 4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 48 ரன்கள் சேர்த்த ரஹானே சாய்க்கப்பட்டார்.

**நூர் அகமது 4....**

6-ஆவது வீரராக ஆண்ட்ரே ரஸ்ஸெல் வர, பாண்டே - ரஸ்ஸெல் ஜோடி 5-ஆவது விக்கெட்டுக்கு 46 ரன்கள் சேர்த்தது. ரஸ்ஸெல் 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 38 ரன்களுக்கு முடித்துக் கொண்டார். ரிங்கு சிங் 9 ரன்களுக்கு விக்கெட்டை இழக்க, ஓவர்கள் முடிவில் மனீஷ் பாண்டே 1 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 36, ரமண்தீப் சிங் 4 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். சென்னை தரப்பில் நூர் அகமது 4, அன்ஷுல் காம்போஜ், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர்.

**வெற்றிக்கு அடித்தளம்...**

அடுத்து, 180 ரன்களை நோக்கி விளையாடிய சென்னை அணியில் ஆயுஷ் மாத்ரே, டெவன் கான்வே டக் அவுட்டாக, அதிரடி காட்டிய உர்வில் படேல் 11 பந்துகளில் 1 பவுண்டரி, 4 சிக்ஸர்களுடன் 31 ரன்களுக்கு வீழ்ந்தார். தொடர்ந்து வந்தோரில் ரவிச்சந்திரன் அஸ்வின் 8, ரவீந்திர ஜடேஜா 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 19 ரன்களுக்கு சாய்க்கப்பட்டனர். 6-ஆவது விக்கெட்டுக்கு இணைந்த டெவால்டு பிரெவிஸ் - ஷிவம் துபே கூட்டணி, 67 ரன்கள் சேர்த்து வெற்றிக்கு அடித்தளமிட்டது. இதில் பிரெவிஸ் 25 பந்துகளில் 4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 52 ரன்களுக்கு விடைபெற, துபே 2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 45 ரன்களுக்கு ஆட்டமிழந்தார்.

**வைபவ் அரோரா 3...**

நூர் அகமது 2 ரன்களுக்கு பெவிலியன் திரும்ப, கேப்டன் தோனி 1 சிக்ஸருடன் 17, அன்ஷுல் காம்போஜ் 4 ரன்களுடன் அணியை வெற்றிபெறச் செய்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். கொல்கத்தா தரப்பில் வைபவ் அரோரா 3, ஹர்ஷித் ராணா, வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 2, மொயீன் அலி 1 விக்கெட் கைப்பற்றினர்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | குஜராத் | 11 | 8 | 3 | 16 | +0.793 |
| 2 | பெங்களூரு | 11 | 8 | 3 | 16 | +0.482 |
| 3 | பஞ்சாப் | 11 | 7 | 3 | 15 | +0.376 |
| 4 | மும்பை | 12 | 7 | 5 | 14 | +1.156 |
| 5 | டெல்லி | 11 | 6 | 4 | 13 | +0.362 |
| 6 | கொல்கத்தா | 12 | 5 | 6 | 11 | +0.193 |
| 7 | லக்னோ | 11 | 5 | 6 | 10 | -0.469 |
| 8 | ஐதராபாத் | 11 | 3 | 7 | 7 | -1.192 |
| 9 | ராஜஸ்தான் | 12 | 3 | 9 | 6 | -0.718 |
| 10 | சென்னை | 12 | 3 | 9 | 6 | -0.992 |

## இன்றைய ஐ.பி.எல் (59-வது லீக்)



**அணிகள் - லக்னோ vs பெங்களூரு**

**இடம் - லக்னோ மணி - மதியம் 7.30**

## காலம் பல வாய்ப்புகளை வழங்கும்:
# முதல்வர் மு.க.ஸ்டாலின் மாணவர்களுக்கு அறிவுரை

**சென்னை, மே 09-**

எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்காதவர்களுக்கு இன்னும் பல வாய்ப்புகளைக் காலம் வழங்குமென முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று வெளியானது. முன்னதாக மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; பிளஸ் 2 தேர்வு முடிவுகள் இன்னும் சற்று நேரத்தில் வெளியாகின்றன. தேர்வு முடிவு எதுவானாலும் அதுவே முடிவல்ல என்பதை மாணவர்களும், பெற்றோர்களும் உணர வேண்டும்.

தேர்ச்சி பெறாதவர்கள், எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்காதவர்களுக்கு இன்னும் பல வாய்ப்புகளைக் காலம் வழங்கத்தான் போகிறது. இது உங்கள் வாழ்வின் தொடக்கம் மட்டுமே. இனிதான் உங்களின் சிறப்பான கட்டம் அமையவுள்ளது என்ற நேர்மறையான பார்வையுடன் இந்தத் தேர்வு முடிவுகளை அணுகுங்கள். பெற்றோர்களும் பிள்ளைகள் மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தாமல், அவர்களது அடுத்தகட்ட வளர்ச்சிக்கு ஒரு நல்ல நண்பனாகத் துணைநில்லுங்கள். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சந்தித்து, 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் குறித்த பகுப்பாய்வு அறிக்கையை அளித்தார். உடன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் சந்திரமோகன் ஆகியோர் உள்ளனர்.

# பாகிஸ்தான் திரைப்படங்கள்: ஓ.டி.டி. தளங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

**புதுடெல்லி, மே 09-**

ஓ.டி.டி. தளங்களில் உள்ள பாகிஸ்தானை மையமாகக் கொண்ட திரைப்படங்கள், வெப் சீரிஸ்களை உடனடியாக நீக்க மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்கு 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளைக் குறிவைத்து பதிலடி கொடுத்து வருகிறது. இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளதால், ஓ.டி.டி. தளங்களுக்கு மத்திய அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. அதாவது, அனைத்து ஓ.டி.டி. தளங்களிலும் பாகிஸ்தானை மையமாகக் கொண்ட திரைப்படங்கள், வெப் சீரிஸ்கள், பாடல்கள் மற்றும் பாட்காஸ்ட்களை மத்திய அரசு தடை செய்துள்ளது.

ஏற்கெனவே, பாகிஸ்தான் யூடியூப் சேனல்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. தேசப் பாதுகாப்பு நலன் கருதி இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# 70 வயதில் பிளஸ் 2 தேர்வு எழுதி வெற்றி பெற்ற மூதாட்டி

**கோவை, மே 09-**

70 வயதில் பிளஸ் 2 தேர்வு எழுதிய கோவையை சேர்ந்த ராணி, 346 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்து உள்ளார்.



தமிழ்நாட்டில் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற்று முடிந்த பிளஸ் 2 பொது தேர்வுகளின் முடிவுகள் வெளியிடப்பட்டி ருக்கின்றன. கடந்த ஆண்டை விட அதிகமாக நடப்பாண்டில் 95.03 விழுக்காடு மாணவ-மாணவிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

கோவையை சேர்ந்தவர் ராணி (வயது 70). இவருடைய கணவர் உயிரிழந்து விட்டார். வீட்டில் தனியாக இருந்த இவருக்கு படிப்பதில் ஆர்வம் ஏற்பட்டு இருக்கிறது. இதன் ஒரு பகுதியாக, வீட்டில் இருந்தபடியே பன்னிரண்டாம் வகுப்புக்கான பாடங்களை படித்து, தேர்வில் கலந்து கொண்டார். இந்நிலையில், பிளஸ் 2 பொது தேர்வு முடிவு வெளியானதில் 346 மதிப்பெண்கள் பெற்று, அவர் தேர்ச்சி அடைந்து உள்ளார்.

தமிழில் அதிகபட்சமாக 89 மதிப்பெண்களும், ஆங்கிலத்தில் 50 மதிப்பெண்களும் பெற்ற அவர், வரலாறு பாடத்தில் 52 மதிப்பெண்கள் என மொத்தம் 346 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்து உள்ளார்.

## பதற்றத்தை ஏற்படுத்தவில்லை:
# பதிலடி மட்டுமே இந்தியா கொடுக்கிறது: மத்திய அரசு

**புதுடெல்லி, மே 09-**

இந்தியா பதற்றத்தை ஏற்படுத்தவில்லை, பதிலடி மட்டுமே கொடுக்கிறது என மத்திய அரசு விளக்கமளித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். அந்தத் தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் வான்வழி தாக்குதலை மேற்கொண்டது. இதில் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இதனால் ஜம்மு காஷ்மீர் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் இந்தியாவில் உள்ள 15 நகரங்கள் மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டதாகவும், பாகிஸ்தானின் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் பாகிஸ்தானின் லாகூரில் உள்ள வான் பாதுகாப்பு அமைப்பு அழிக்கப்பட்டதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பேசிய கர்னல் சோபியா குரேஷி, "ஆபரேஷன் சிந்தூருக்கு பிறகு இந்திய ராணுவ தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்த பாகிஸ்தான் முயன்றது. பாகிஸ்தான் ஏவுகணைகளை இந்தியாவின் வான் பாதுகாப்பு கட்டமைப்பு நடுவானிலேயே தடுத்து தாக்குதலை முறியடித்தது. பாகிஸ்தான் நடத்த இருந்த ஏவுகணை, டிரோன் தாக்குதல்கள் தோல்வியடைந்தன" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி கூறியதாவது;-

லாகூரில் உள்ள வான் பாதுகாப்பு கட்டமைப்பை இந்திய ராணுவம் ஏவுகணைகள் மூலம் தாக்கி அழித்தது. பாகிஸ்தான் ராணுவத்தை குறிவைத்து இந்தியா தாக்குதல் நடத்தவில்லை. அதே சமயம் பாகிஸ்தான் ராணுவம் நடத்திய தாக்குதலில் 5 குழந்தைகள் உள்பட 16 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவால் கொல்லப்பட்டவர்களுக்கு ராணுவ மரியாதை அளித்து இறுதிச்சடங்கு நடந்துள்ளது. பாகிஸ்தானில் உள்ள எந்தவொரு மத வழிபாட்டு தளங்களையும் குறிவைத்து இந்தியா தாக்குதல் நடத்தவில்லை. இந்தியாவின் நோக்கம் பயங்கரவாதிகளை தாக்குவது மட்டுமே, மக்களை அல்ல. மேற்கொண்டு பாகிஸ்தான் தாக்கினால் உரிய பதிலடி தரப்படும்.

இந்தியா பதற்றத்தை ஏற்படுத்தவில்லை, பதிலடி மட்டுமே கொடுக்கிறது. இந்தியாவின் பதில் நடவடிக்கை மீது வகுப்புவாத சாயம் பூச பாகிஸ்தான் முயற்சிக்கிறது. சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை பாகிஸ்தான் தான் மீறியது. சிந்து நதி ஒப்பந்தம் குறித்து விவாதிக்க பலமுறை நோட்டீஸ் அனுப்பியும் பாகிஸ்தான் தரப்பில் இருந்து எந்தவித பதிலும் இல்லை. கொடூர தாக்குதலுக்கு ஆளான இந்தியாவின் பதிலடிக்கு உலக தலைவர்கள் மதிப்பளித்துள்ளனர்."

இவ்வாறு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

## டெல்லியே திரும்பிப்பார்க்கும்:
# தமிழ்நாடு அரசின் மாதிரிப்பள்ளி குறித்து முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

**திருச்சி, மே 09-**

டெல்லியே திரும்பிப் பார்க்கும் வகையில் நம்முடைய மாதிரிப் பள்ளி உருவாகியிருப்பதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பள்ளிக் கல்வித்துறை சார்பில் திருச்சிராப்பள்ளி, துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் ரூ. 19.65 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக்கான புதிய கட்டடத்தையும், தரை மற்றும் நான்கு தளங்களுடன் தலா 18.91 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் மற்றும் மாணவியர்களுக்கான தனித்தனி விடுதிக் கட்டடங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (மே 8) திறந்து வைத்தார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில், கடந்த 2022-ம் ஆண்டு டெல்லிப் பயணத்தின்போது, அங்கு நான் கண்ட மாதிரிப் பள்ளிகள் போல் தமிழ்நாட்டிலும் உருவாக்கப்படும் என்றேன். சொன்னபடி, மாவட்டத்திற்கு ஒன்று என 38 மாதிரிப் பள்ளிகளை உருவாக்கினோம். இப்போது அதற்கான நிரந்தர உட்கட்டமைப்பை உருவாக்கி, முதல் கட்டடத்தை திருச்சி மாவட்டம் துவாக்குடியில் திறந்து வைத்திருக்கிறேன்.

டெல்லியே திரும்பிப் பார்க்கும் வகையில் நம்முடைய மாதிரிப் பள்ளி உருவாகியிருக்கிறது. ஏற்கெனவே நம்முடைய மாதிரிப் பள்ளிகளில் பயின்ற 977 மாணவர்கள் நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களிலும் - பன்னாட்டுக் கல்வி நிறுவனங்களிலும் பயிலுகின்றனர். இந்த மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர உழைப்போம். அரசுப் பள்ளிகளைப் பெருமையின் அடையாளமாக மாற்றி வரும் அமைச்சர் அன்பில் மகேஸ் மற்றும் பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகளுக்கு வாழ்த்துகள். பாராட்டுகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

## ரூ.60 ஆயிரம் கோடியில்
# தொழிற்கல்வி மேம்பாட்டு திட்டம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புதுடெல்லி, மே 09-**

சென்னை உள்ளிட்ட 5 நகரங்களில் தேசிய திறன் பயிற்சி நிறுவன மேம்பாட்டுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. கூட்டத்தில் தேசிய தொழிற்கல்வி மேம்பாட்டுக்காக பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. குறிப்பிடத்தக்க அம்சமாக 1,000 அரசு தொழிற்பயிற்சி மையங்கள் (ஐ.டி.ஐ.) மேம்படுத்தப்படுகின்றன. அவற்றில் தொழில் ரீதியாக புதுப்பிக்கப்பட்ட வர்த்தகப் படிப்புகள் சேர்க்கப்படுவதுடன், தேசிய திறன்மேம்பாட்டு பயிற்சி மையங்கள் வழிகாட்டலில் பயிற்சிகள் வழங்கப்படும். சென்னை உள்ளிட்ட 5 தேசிய திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்களை (என்.எஸ்.டி.ஐ.) மேம்படுத்தப்படுகின்றன.

இந்த திட்டங்கள் ரூ.60 ஆயிரம் கோடி செலவில் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும். இதில் மத்திய அரசின் பங்களிப்பு ரூ.30 ஆயிரம் கோடியாகும். இந்த பங்களிப்பில் 50 சதவீதத்தை ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலக வங்கிகள் பகிர்ந்தளிக்க உள்ளன. மீதி ரூ.30 ஆயிரம் கோடியானது மாநில அரசு பங்களிப்பு ரூ.20 ஆயிரம் கோடி மற்றும் தொழிற்துறை பங்களிப்பு ரூ.10 ஆயிரம் கோடியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் சென்னை, புவனேசுவரம், ஐதராபாத், கான்பூர் மற்றும் லூதியானா ஆகிய 5 என்.எஸ்.டி.ஐ.களில் பயிற்சியாளர்களின் மேம்பட்ட பயிற்சி வசதிகளுக்கான உள்கட்டமைப்பு மேம்படுத்தல் மேற்கொள்ளப்படும். கூடுதலாக, 50 ஆயிரம் பேருக்கு பயிற்சி வழங்கப்படும்.

இவ்வாறு மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது. அனல் மின் நிலையங்களுக்கு புதிய நிலக்கரி இணைப்புகள் பெறவும் மத்திய மந்திரி சபை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி உள்நாட்டு மின் உற்பத்தியாளர்கள், (தேவைப்பட்டால்) 12 மாதங்கள் வரை அல்லது 12 மாதங்களுக்கும் மேலான காலத்துக்கு 25 ஆண்டுகள் வரை ஏல அடிப்படையில் நிலக்கரியைப் பெற வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

## பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியீடு:
# தமிழ்நாட்டில் 95.03% தேர்ச்சி
## அரியலூர் மாவட்டம் முதலிடம்

**சென்னை, மே 09-**

**பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவுகளை நேற்று (மே 8) காலை 9 மணிக்கு பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்டார். அதில், மொத்தம் 95.03 சதவீதம் மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் வழக்கம் போல் மாணவிகள் தேர்ச்சி விகிதம் அதிகம். அதன்படி மாணவிகள்: 96.70 சதவீதமும் , மாணவர்கள்: 93.16 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு மொத்த தேர்ச்சி விகிதம் 94.56 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. மாவட்டங்களில் அரியலூர் முதலிடம் பிடித்துள்ளது.**

தமிழகத்தில் பிளஸ் 2 மாணவர்களுக்கான பொதுத் தேர்வுகள் மார்ச் 3-ம் தேதி தொடங்கி 25-ம் தேதி நிறைவடைந்தது. இந்நிலையில், தமிழ்நாடு முழுவதும் பிளஸ் 2 பொதுத்தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளுக்ளுக்கான தேர்வு முடிவுகள் நேற்று காலை 9.00 மணியளவில் வெளியானது. மாணவர்கள் தங்களின் மதிப்பெண் விபரங்களை, 'ஆன்லைன்' வழியில் தெரிந்து கொள்ளலாம். தேர்வு முடிவுகளை, https://results.digilocker.gov.in மற்றும் www.tnreuslts.nic.in ஆகிய இணையதளங்களில், தேர்வர்கள் தங்கள் பதிவெண் மற்றும் பிறந்த தேதியை பயன்படுத்தி தெரிந்து கொள்ளலாம். பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும், தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

தேர்வு எழுதிய மாணவர்கள் அனைவரின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கும், தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் தேசிய தகவல் மையங்களிலும், அனைத்து மைய மற்றும் கிளை நூலகங்களிலும், கட்டணமின்றி தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம். பிளஸ் 2 பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு 25.06.2025 முதல் துணை தேர்வு நடத்தப்படும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவித்துள்ளார்.

### தேர்ச்சி விவரங்கள்:

1) தேர்ச்சி பெற்றவர்கள் : 7,53,142 (95.03சதவீதம்).
2) மாணவியர் - 4,05,472 (96.70 சதவீதம்).
3) மாணவர்கள் - 3,47,670 (93.16 சதவீதம்).
4) தேர்விற்கு வருகைப்புரியாதவர்கள்: 10,049.
5) பள்ளிகள் மேலாண்மை வாரியான தேர்ச்சி சதவீதம்.
6) அரசுப் பள்ளிகள் - 91.94 சதவீதம்.
7) அரசு உதவி பெறும் பள்ளிகள்- 95.71சதவீதம்.
8) தனியார் சுயநிதிப் பள்ளிகள்- 98.88சதவீதம்.
9) பள்ளிகள் வகைபாடு வாரியான தேர்ச்சி சதவீதம்.
10) இருபாலர் பள்ளிகள் - 95.30 சதவீதம்.
11) பெண்கள் பள்ளிகள் - 96.50 சதவீதம்.
12) ஆண்கள் பள்ளிகள் - 90.14 சதவீதம்.

### முதல் 5 மாவட்டங்கள்:

1) அரியலூர் — 98.32 சதவீதம்.
2) ஈரோடு — 96.88 சதவீதம்.
3) திருப்பூர் — 95.64 சதவீதம்.
4) கன்னியாகுமரி — 95.06 சதவீதம்.
5) கடலூர் — 94.99 சதவீதம்.

# சினிமா CINI செய்திகள்

## ரோபோ சங்கர் நடிக்கும் 'அம்பி'



மேடை கலைஞராக தனது கலை பயணத்தை துவக்கி தொடர்ந்து சின்னத்திரை, பிறகு வெள்ளித்திரையில் காமெடியனாக கலக்கிக் கொண்டிருக்கும் ரோபோ சங்கர் இந்த படத்தின் மூலம் கதையின் நாயகனாக அறிமுகமாகிறார்.

*T2 Media* என்ற புதிய பட நிறுவனம் சார்பில் பிரசாந்தி பிரான்சிஸ் தயாரித்திருக்கும் படத்திற்கு '' அம்பி '' என்று பெயரிட்டுள்ளனர். இது முழுக்க முழுக்க பேமிலி ட்ராமா கலந்த காமெடி திரைப் படம்.

இந்த கதையின் நாயகன் நிஜத்தில் அம்பியாக ,அப்பாவியாக , பயந்தாங்கோலியாக இருக்க அவனை சுற்றி உள்ளவர்கள் ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையால் அவனால் தான் அனைத்தும் நடந்தது அவன் பெரிய வீரன், பெரிய அதிர்ஷ்டசாலி என்று நம்ப ஆரம்பிக்கிறார்கள். இப்படி மாட்டிக் கொண்ட நாயகன் எப்படி அவர்களிடம் இருந்து தப்பித்தார், இறுதியில் அம்பியாக இருந்தாரா இல்லை அன்னியனாக மாறினாரா என்பதை குடும்பத்துடன் பார்க்கக்கூடிய நகைச்சுவை நிறைந்த படமாக உருவாக்கி இருக்கிறோம்.

இந்த கதைப்படி கதையின் நாயகன் திருமணம் ஆகாத 40 வயது மதிக்கத்தக்க கதாபாத்திரம் என்பதால் அதற்கு ஒரு காமெடியன் நடித்தால் நன்றாக இருக்கும் என்று ரோபோ சங்கரை நடிக்க வைத்தேன். அவர் சிறப்பாக நடித்துள்ளார்.

## சிம்புவுக்கு நன்றி சொன்ன சந்தானம்



DD நெக்ஸ்ட் லெவல்'' பட விழாவில் நடிகர் சிம்பு. நிஹாரிகா என்டர்டெய்ன்மென்ட் தயாரிப்பில் தி ஷோ பீப்பிள் பேனரில் நடிகர் ஆர்யா வழங்க சந்தானம் நடிப்பில் உருவாகி வரும் 16ம் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் 'டெவில்ஸ் டபுள் நெக்ஸ்ட் லெவல்' திரைப்படத்தின் வெளியீட்டு முன் நிகழ்வு சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. நடிகர் சந்தானம் பேசுகையில், இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள எஸ் டி ஆர் அவர்களுக்கு நன்றி. அவரைப் பற்றி நான் பல மேடைகளிலும், பல இன்டர்வியூக்களிலும் சொல்லியிருக்கிறேன், அவர் இல்லை என்றால் நான் இல்லை என்று. அவர்தான் என்னை சினிமாவில் அறிமுகப்படுத்தி , உயரத்திற்கு அழைத்துச் சென்றார். 'காதல் அழிவதில்லை' படத்தில் துணை நடிகராக நடித்திருக்கிறேன். அதனை பார்த்து தான் 'மன்மதன்' படத்தில் எனக்கு வாய்ப்பளித்தார் சிலம்பரசன்.

படப்பிடிப்பு தளத்தில் எனக்கான அறிமுகக் காட்சி பற்றிய விவாதம் நடைபெற்றது. ''நீ லொள்ளு சபாவில் இருந்து சினிமாவிற்கு வந்திருக்கிறாய். உன்னுடைய அறிமுகக் காட்சியில் ரசிகர்களிடத்தில் கைதட்டல் வர வேண்டும்.

அதற்காக எப்படி உன்னை அறிமுகப்படுத்துவது'' என விவாதித்து கொண்டிருக்கிறோம் என்றார். அந்த விவாதத்தில் நானும் கலந்து கொண்டு என்னுடைய யோசனையையும் சொன்னேன். இது போன்றதொரு நல்ல மனம் படைத்த சிலம்பரசன் நண்பராக கிடைத்ததற்கு இறைவனுக்குத்தான் நான் நன்றியை சொல்ல வேண்டும். சிம்பு ஐ லவ் யூ. எப்போதும் அவருக்கு பின்னால் நான் இருப்பேன். எஸ் டி ஆர் 49லும் என்னுடைய பங்களிப்பை வழங்குவேன். என்னுடைய பெற்றோர்களுக்கும் நன்றி சொல்ல வேண்டும் என்றார்.

## வெர்டிகள் சினிமா 'யுகம்'



குழந்தை வேலப்பன் இயக்கத்தில் குழந்தை வேலப்பன், நர்மதா பாலு மற்றும் கவிதாபாரதி நடிப்பில் உருவாகி இருக்கும் ஷார்ட் வெர்டிகிள் வெப்சீரிஸ் 'யுகம்'. இதன் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது. இயக்குநர், நடிகர் குழந்தை வேலப்பன், இனிவரும் காலத்தில் தலைமுறையினருக்கு மொபைலை திருப்புவதற்கு கூட சோம்பேறித்தனமாக இருக்கும் அந்த சோம்பேறித்தனத்தை எப்படி காசாக்கலாம் என்பதற்கான கான்செப்ட் தான் இந்த வெட்டிகள் ஐடியா, என்று சமீபத்தில் நான் கலந்து கொண்ட கான்ஸ் திரைபட விழாவில் வெர்டிகள் சினிமா வருங்காலத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும் என ஒரு கலந்துரையாடல் நடந்தது, அதில் கலந்து கொண்டது தான் இந்த வெப் சீரிஸ் எடுக்க காரணமாக அமைந்தது. எந்த பார்மேட்யாக இருந்தாலும் கதை சொல்லும் விதம் தான் அதை ரசிப்பு தன்மைகுள் கொண்டு செல்லும், ஆரம்பத்தில் இந்த கதையை நான் சொல்லும் பொழுது பலருக்கும் புரியவில்லை. ஆனால் அதை எழுதிக் கொண்டு போய் கொடுத்த பொழுது புரிந்து கொண்டு உற்சாகப்படுத்தினார்கள். படம் எடுக்கும் சில சவால்கள் காத்திருந்தது, அதை புரிந்து கொண்டு அதற்காக கேமரா மேன் சரவணன்ராமசாம சில மாற்று முறைகள் கையாண்டு சிலவற்றை கற்றுக்கொண்டே மொத்த குழுவும் சேர்ந்து உழைத்து படம் எடுத்து முடித்தோம்.



**மதுரை மாநகராட்சி அலுவலகத்தில் 12-ம் வகுப்பில் முதல் 3 இடங்களை பெற்ற மாணவிகள் மலர்விழி, சுவேதாரத்னா, நிவாஷ்னி ஆகிய மாணவிகளை மேயர் இந்திராணி, ஆணையாளர் சித்ரா ஆகியோர் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர். உடன் கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன், துணை ஆணையாளர் ஜெய்னுலாபுதீன் ஆகியோர் உள்ளனர்.**

## 'ஹார்ட் பீட் சீசன் 2' வெப் சீரிஸ்



தமிழ் ரசிகர்கள் மத்தியில் மிகவும் புகழ்பெற்ற வெப் சீரிஸ் 'ஹார்ட் பீட்'. இதன் இரண்டாவது சீசன் புரோமோ தற்போது ஜியோஹாட்ஸ்டாரில் வெளியாகியுள்ளது. இதன் முதல் சீசன் பரபரப்பான திருப்பங்களுடன் முடிவடைந்த நிலையில், விடை தெரியாத கேள்விகளுக்கான விடையை தெரிந்து கொள்ள இரண்டாவது சீசனை ரசிகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்து உள்ளனர்.

பல எமோஷனலான தருணங்கள், வலுவான கதாபாத்திரங்கள் மற்றும் மருத்துவமனை வாழ்க்கையின் உண்மையான சித்தரிப்புடன் இருப்பதால் 'ஹார்ட் பீட்'டுக்கென தனி ரசிகர்கள் பட்டாளம் உண்டு. வரவிருக்கும் இரண்டாவது சீசன் பல முக்கிய தருணங்கள், முரண்கள் மற்றும் உணர்வுப்பூர்வமான கதையைத் தர இருக்கிறது. தீபக் சுந்தரராஜன் எழுதி இயக்கியுள்ளார். இந்தத் தொடர் விரைவில் ஜியோஹாட்ஸ்டாரில் ஸ்ட்ரீமாக இருக்கிறது.

## 'மாமன்' இசை வெளியீடு




நடிகர் சூரி கதையின் நாயகனாக நடித்திருக்கும் படம் 'மாமன்' இதன் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இயக்குநர் பிரசாந்த் பாண்டியராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள 'மாமன் ' எனும் திரைப்படத்தில் சூரி, ராஜ் கிரண், ஐஸ்வர்யா லட்சுமி, மற்றும் பலர் நடித்துள்ளனர். நடிகர் ராஜ் கிரண் பேசுகையில், '' இந்த திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்ததை நான் பெருமிதமாக நினைக்கிறேன். இந்த திரைப்படத்தில் நாயகனாக நடித்திருக்கும் சூரியும், அவருக்கு ஜோடியாக நடித்திருக்கும் ஐஸ்வர்யாவும் ,அக்கா கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் சுவாசிகாவும் போட்டி போட்டுக் கொண்டு நடித்திருக்கிறார்கள்.

இவர்களைத் தவிர விஜி சந்திரசேகர், கீதா கைலாசம், ஜெயபிரகாஷ், நான் என பலர் இருக்கிறோம். எல்லோரும் அவங்களுடைய பங்களிப்பை மிகச் சிறப்பாக செய்திருக்கிறார்கள். அனைவருக்கும் நன்றி. என்றார்.

## ராமநாதபுரத்தில் கலெக்டர் தலைமையில் பள்ளி வாகனங்களுக்கான கூட்டாய்வு



**ராமநாதபுரம், மே 09-**

ராமநாதபுரத்தில் பள்ளி வாகனங்களுக்கான கூட்டாய்வு கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் தலைமையில் நடந்தது.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகம் மூலம் பள்ளி வாகனங்களுக்கான கூட்டாய்வு நடைபெற்றது. இக்;கூட்ட ஆய்வில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையேற்று பள்ளி வாகனங்களுக்கான கூட்டாய்வு பணியினை துவக்கி வைத்து பள்ளி வாகனங்களின் உட்கட்டமைப்பு வசதி மற்றும் செயல் திறன் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். 2025-2026 கல்வி ஆண்டில் இயக்கும் பள்ளி வாகனங்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசு சிறப்பு விதி 2012ன்படி கடைபிடித்து இயக்க அறிவுறுத்தப்படுகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் 69 தனியார் பள்ளிகளில் 549 பள்ளி பேருந்துகள் பள்ளி மாணாக்கர்களை பள்ளிக்கு அழைத்து வர பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு பள்ளி வாகன சிறப்பு விதி 2012ன்படி வருடத்திற்கொரு முறை வருவாய்த்துறை, காவல் துறை, பள்ளி கல்வித் துறை மற்றும் போக்குவரத்து துறை ஆகியோர் இணைந்து பள்ளி வாகனங்களை கூட்டாய்வு செய்து பள்ளி வாகனங்களை சீரிய முறையில் இயக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி, இன்று மாவட்டத்தில் உள்ள பள்ளி வாகனங்கள் நல்ல நிலையில் இயங்குகிறதா என பரிசோதிக்கப்பட்டது.

இந்த பள்ளி வாகன கூட்டாய்வில் வாகனத்தினுடைய உறுதி, வாகனத்தினுடைய டயர்கள், வாகனத்தினுடைய உட்புற தரைதளம், வாகனத்தினுடைய இருக்கைகள், வாகனத்தினுடைய அவசரகால கதவு வாகனத்தினுடைய படிக்கட்டுகள், வாகனத்தினுடைய பிரேக் திறன், அவசர கால பயன்பாட்டிற்கான தீயணைப்புக்கருவி, முதலுதவிப்பெட்டியில் மருந்துகள் மற்றும் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள கேமரா நல்ல நிலையில் இயங்குகிறதா என்று சோதிக்கப்பட உள்ளது.

இந்த சோதனையில் குறைபாடுள்ள பள்ளி வாகனங்களின் தகுதிச்சான்று தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டு சீர்செய்த பின்பு தான் இயக்கபட அனுமதி வழங்கப்படும். மேலும் பள்ளி வாகனங்களை தினந்தோறும் முழுமையாக பரிசோதித்து குறையின்றி முறையாக பராமரித்து சீரிய முறையில் பள்ளி வாகனங்களை இயக்க இம்மாவட்ட தனியார் பள்ளி வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் பள்ளி பேருந்தின் நடத்துனர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பள்ளி பேருந்தின் நடத்துனர்கள் பள்ளி வாகனங்களை முறையாக பராமரித்து, சீரிய முறையில் இயக்கி விபத்தில்லாத ஆண்டாக அமைந்திட ஒவ்வொரு ஓட்டுநரும் உறுதிமொழி ஏற்று அரசு வழிகாட்டுதலை கடைபிடித்து செயல்பட வேண்டும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

இந்த ஆய்வின்போது வட்டார போக்குவரத்து அலுவலர் ஆனந்த், முதன்மை கல்வி அலுவலர் சின்னராசு, வாகன ஆய்வாளர்கள் செந்தில்குமார் (ராமநாதபுரம்), பத்மபிரியா (பரமக்குடி) மாவட்ட தீயணைப்பு அலுவலர் கோமதி அமுதா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




**மதுரை மீனாட்சி அம்மன் திருக்கல்யாணத்தை முன்னிட்டு தினமணி தியேட்டர் அருகில் மாநகர மாவட்ட 72-வது வார்டு அ.தி.மு.க. கவுன்சிலர் ரூபினி குமார் ஏற்பாட்டில் 2000 பேருக்கு அறுசுவையுடன் கூடிய அன்னதானத்தை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், சண்முகவள்ளி, ஏ.பார்த்திபன், கலைச்செல்வம், கறிக்கடை முத்துகிருஷ்ணன், நீதிகாந்த், மார்கெட் மார்நாடு, ஓட்டுரணி திருமுருகன், வி.பி.ஆர்.செல்வகுமார், மலர்விழி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

### திண்டுக்கல் மாவட்டத்தில்

## அபிராமி அம்மன் கோவிலில் திருக்கல்யாண வைபோகம்

### ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்



**திண்டுக்கல், மே 09-**

திண்டுக்கல் ஸ்ரீ அபிராமி அம்மன் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு திருக்கல்யாண வைபோகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். திண்டுக்கல் நகரின் மத்தியில் இந்து சமய அறநிலை துறைக்கு சொந்தமான வரலாற்று சிறப்பு மிக்க பழமையான அருள்மிகு அபிராமி அம்மன் உடனமர் பத்மகிரீஸ்வரர் ஞானாம்பிகை உடனமர் காலஹத்தீஸ்வரர் திருக்கோவில் உள்ளது. இங்கு ஒவ்வொரு வருடமும் சித்திரை திருவிழா 12 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும். திருவிழாவின் போது ஒவ்வொரு நாளும் பத்மகிரீஸ்வரர் அபிராமி அம்மன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி நான்கு ரத வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்கள்.

இந்த வருடத்திற்கான திருவிழா கடந்த மாதம் 29 தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. திருவிழாவின் 10ஆம் நாளான நேற்று 8-ம் தேதி ஸ்ரீ பத்மகிரீஸ்வரருக்கும் அருள்மிகு ஸ்ரீ அபிராமி அம்மனுக்கும் பக்தர்கள் முன்னிலையில் திருமணம் வெகு விமர்சையாக நடைபெற்றது. முன்னதாக மாப்பிள்ளை அழைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது அதனை தொடர்ந்து பூணல் மாற்றுதல், வஸ்திரம் சாற்றுதல், மாலை மாற்றுதல், போன்ற வைபவங்கள் இனிதே நடைபெற்றது இதனை தொடர்ந்து பத்மகிரீஸ்வரர் அபிராமி அம்மனுக்கு காலை 10.20 மணியளவில் திருமணம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து திருக்கல்யாணத்தை காண வந்த ஆயிரக்கணக்கான பெண்கள் தாலிக்கயிற்றை மாற்றிக் கொண்டனர். திருக்கல்யாண வைபோகம் முடிவடைந்த உடன் சுவாமிக்கு சிறப்பு தீபாராதனை காட்டப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தலைவர் சரவணன், மாநகராட்சி மேயர் இளமதிஜோதி பிரகாஷ், தாசில்தார் மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். திருமண வைபவத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அபிராமி அம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் வேலுச்சாமி மற்றும் வீரக்குமார் சண்முகவேல் நிர்மலா மலைச்சாமி உள்ளிட்ட அறங்காவலர் குழுவினர் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஆன குடிநீர் கழிப்பறை உள்ளிட்ட வசதிகளை சிறப்பாக செய்திருந்தனர் பாதுகாப்பு பணியில் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் வெங்கடாசலபதி தலைமையிலான போலீசார் செய்திருந்தனர். முன்னதாக மாப்பிள்ளை அழைப்பின் போது கோவில் முன்பு தீரன் வள்ளிக்கும்மி ஆட்ட கலைக்குழுவை சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட கும்மியாட்டம் நடைபெற்றது

### பரமக்குடியில் உள்ள

## ஈஸ்வரன் கோவிலில் திருக்கல்யாணம்



**பரமக்குடி, மே 09-**

பரமக்குடி சவுராஷ்டிர பிராமண மகாஜனங்களுக்கு சொந்தமான சுந்தரராஜ பெருமாள் தேவஸ்தானத்தை சேர்ந்த ஈஸ்வரன் கோயிலில் சித்திரை திருவிழா நடக்கிறது.

இக்கோவிலில் சந்திரசேகர சுவாமி, விசாலாட்சி அம்மன் அருள் பாலிக்கின்றனர். தினமும் சுவாமி, அம்மன் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வருகின்றனர்.

மேலும் நடராஜர் புறப்பாடு மற்றும் குதிரை வாகனத்தில் சுவாமி, அம்மன் வலம் வந்து திக்விஜயம் நடந்தது. தொடர்ந்து நேற்று முன்தினம் அம்மன் தபசு திருக்கோலத்தில் அருள் பாலித்த நிலையில்,

சுவாமி அம்மன் மாலை மாற்றுதல் நிகழ்ச்சி நடந்தது. நேற்று காலை 10 மணிக்கு மேல் சந்திரசேகர சுவாமி மாப்பிள்ளை கோலத்தில் வீதி உலா வந்து கோயிலை அடைந்தார். பின்னர் விசாலாட்சி அம்மன், சந்திரசேகர சுவாமி ஊஞ்சலில் அமர்ந்தனர். தொடர்ந்து காலை 10.50 மணிக்கு திருக்கல்யாணம் உற்சவம் நடந்தது. ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். ஏற்பாடுகளை சுந்தரராஜ பெருமாள் தேவஸ்தான டிரஸ்டிகள் செய்தனர்.

# கேளிக்கை வரி மசோதாவுக்கு தமிழ்நாடு கவர்னர் ஒப்புதல்

**சென்னை, மே 09-**

கேளிக்கை வரி மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

கல்வி நிறுவனங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு 10 சதவீதம் கேளிக்கை வரி விதிக்கும் தமிழ்நாடு அரசின் சட்ட மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற சட்டசபை கூட்டத்தொடரில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. தமிழக அரசு நிறைவேற்றிய மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல் அளித்த நிலையில் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வி நிறுவனம் உள்ளிட்ட எந்தவொரு நிறுவனத்தால் அனுமதி கட்டணம் வசூலித்து நடத்தப்படும்

இசை நிகழ்ச்சி, நாடகம், காட்சி அல்லது பிற நிகழ்ச்சி எதற்கும் கேளிக்கை வரி விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் அதிகாரம் அளிக்க சட்டங்கள் எதுவும் தற்போது இல்லை. எனவே அது போன்ற நிகழ்ச்சிகளுக்கான அனுமதிக் கட்டணத்தின் மீது 10 சதவீதம் கேளிக்கைகள் வரி விதிக்கவும், வசூலிக்கவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிவகை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

இதற்காக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் கேளிக்கை வரிச்சட்டத்தில் திருத்தம் செய்து, புதிய பிரிவு சேர்க்கப்படுகிறது.

கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி, நாடகம், காட்சி அல்லது பிற நிகழ்ச்சியின் அனுமதிக் கட்டணத்தில் மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள் 10 சதவீதம் கேளிக்கை வரி வசூலிக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம்: துரைமுருகனுக்கு சட்டத்துறை ஒதுக்கீடு

**சென்னை, மே 09-**

தமிழக அமைச்சரவையில் இலாகாக்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதன்படி அமைச்சர் துரைமுருகனுக்கு சட்டத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் ரகுபதிக்கு கனிமம் மற்றும் சுரங்கத் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அமைச்சரவையில் நீர்வளத்துறை மற்றும் கனிமம் மற்று சுரங்கத் துறை அமைச்சராக துரைமுருகனும், சட்டத்துறை அமைச்சராக எஸ்.ரகுபதியும் இருந்து வந்தனர். இந்நிலையில், அமைச்சரவையில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் துரைமுருகனுக்கு தற்போது சட்டத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீர்வளத்துறையுடன் சேர்த்து இனி சட்டத்துறையையும் அவர் கவனித்துக் கொள்வார். அதேநேரம், அமைச்சர் துரை முருகன் வசமிருந்த கனிமம் மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் ரகுபதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிந்துரைப்படி அமைச்சரவை இலாகா மாற்றத்துக்கு ஆளுநர் மாளிகை ஒப்புதல் அளித்துள்ளது.

அண்மையில், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் கலால் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி மற்றும் வனத்துறை அமைச்சர் கே.பொன்முடி ஆகியோரின் ராஜினாமாவைத் தொடர்ந்து தற்போது மீண்டும் தமிழக அமைச்சரவையில் இலாகா மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான நடத்த இருந்த தாக்குதலை...

(1-ம் பக்க தொடர்ச்சி)

நடத்தப்பட்ட பாகிஸ்தானின் முயற்சியையும் இந்தியா முறியடித்து உள்ளது. இதேபோன்று டிரோன்களை கொண்டு தாக்க முயன்ற அந்நாட்டு முயற்சியையும் இந்திய ராணுவம் முறியடித்து உள்ளது.

பாகிஸ்தானின் வான் பாதுகாப்பு ரேடார்கள் தகர்க்கப்பட்டன. வான் தடுப்பு பிரிவையும் இந்தியா தாக்கி அழித்தது. காலையில் இருந்து இந்தியாவின் இந்த பதிலடி தொடர்ந்து வருகிறது.

இதில், ஜம்மு, ஸ்ரீநகர், பதன்கோட், ஜலந்தர், லூதியானா, ஆதம்பூர், சண்டிகார் உள்ளிட்ட 15 நகரங்களை தாக்க முயன்ற பாகிஸ்தானின் முயற்சி முறியடிக்கப்பட்டு உள்ளது. பஞ்சாப்பின் ஜலந்தர், லூதியானா, ஆதம்பூர், சண்டிகார் ஆகிய நகரங்களிலும், காஷ்மீரின் ஜம்மு, ஸ்ரீநகர், பதன்கோட் உள்ளிட்ட நகரங்களிலும் தாக்குதலை பாகிஸ்தான் தீவிரப்படுத்திய நிலையில், அதனை இந்தியா முறியடித்து உள்ளது.

# 19.65 கோடி ரூபாய் மதிப்பில்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

பெற்று அங்குள்ள பல்கலைக் கழகங்களில் படிக்கச் சென்றனர்.

**38 மாதிரிப் பள்ளிகள்...**

தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு ஒன்று என 38 மாதிரிப் பள்ளிகள் உண்டு உறைவிடப் பள்ளிகளாக செயல்பட்டு வருகின்றன. தனியார் மற்றும் அரசுக் கல்லூரி வளாகங்களில் அமைக்கப்பட்டுள்ள இம்மாதிரிப் பள்ளிகளுக்கு நிரந்தர இடம் அமைக்கும் பொருட்டு, கடந்த 2023-24ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதல் கட்டிமாக திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 56.47 கோடி ரூபாய் செலவில் புதியக் கட்டிடங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

**முதல்வர் கலந்துரையாடல்...**

அதன் அடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக்கான இடம் திருச்சிராப்பள்ளி, துவாக்குடி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் ஒதுக்கப்பட்டு, தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 54,676 சதுர அடி கட்டிட பரப்பளவில் 19.65 கோடி ரூபாய் செலவில் வகுப்பறைகள், பணியாளர் அறை, நூலகம், பல் நோக்கு அறை, கழிவறைகள், விளையாட்டுத் திடல், கலையரங்கம், ஆய்வுக் கூடங்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், தரை மற்றும் நான்கு தளங்களுடன் தலா 73,172 சதுர அடி பரப்பளவில் தலா 18.91 கோடி ரூபாய் செலவில், சுமார் 440 மாணவர்கள் மற்றும் 440 மாணவியர்கள் தங்குவதற்குரிய தனித்தனி விடுதிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. முன்னதாக, தமிழ்நாடு முதல்வர் அப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவரின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். பின்னர், அப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைகள், கலையரங்கம், கணினி ஆய்வகம் போன்றவற்றை பார்வையிட்டதோடு, மாணவ, மாணவியர்களோடு கலந்துரையாடினார்.

